

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:

முகமது இப்ராஹிம் & கம்பெனி, சென்னை. S. கண்ணன் & கம்பெனி, திருச்சிராப்பள்ளி,
V. S. ராஜகோபாலன் கம்பெனி, சென்னை, பங்களூர், சேலம், கோயமுத்தூர்.
M. A. வீருதயசாமி & கம்பெனி, உதகமண்டலம்.

ராயல டாக்கீஸ்

ஹரிதாஸ்



அக்டோபர்

16உ

தீபாவளியன்று மகத்தான ஆரம்பம்

தியாகராஜ பாகவதர் * ராஜகுமாரி
வஸந்தகோகிலம் * கிருஷ்ணன்-மதுரம் நடிப்பது

மதராஸ்	...	பிரபாத் டாக்கீஸ்
மதராஸ்	...	ஸினிமா ஸெண்டிரல்
மதுரை	...	சிந்தாமணி டாக்கீஸ்
திருச்சி	...	வெலிங்டன் டாக்கீஸ்
கோயமுத்தூர்	...	ராஜா & டயமண்ட்
சேலம்	...	ஸெண்ட்ரல் டாக்கீஸ்
தஞ்சாவூர்	...	டவர் டாக்கீஸ்
புதுச்சேரி	...	நியூ கமர்ஷியல் டாக்கீஸ்
கன்னிக்கோட்டை	...	ராதா பிக்சர் பாலெஸ்

ப்ரொடியூசர்கள் :

ராயல் டாக்கி டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

மதுரை :: பெஜவாடா





காலைத்தூக்கி நின்று ஆடும் தெய்வமே
N. 16234 யதுகுலகாம்போதி

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

"His Master's Voice"

ஊசிகளின் புதிய விலைகள்

"எச். எம். வி."	ஹைபிடெலிடி 10	ஊசிகொண்டுள்ள	பாக்கெட்	1-க்கு	ரூ. 1/8
,,	எக்ஸ்ட்ரா ஊசிகள் 200	,,	பெட்டி	1-க்கு	ரூ. 1/8
"ட்வின்"	எக்ஸ்ட்ரா ஊசிகள் 200	,,	,,	1-க்கு	ரூ. -/14

கல்கி
பொருளடக்கம்

மலர் 4 | இதழ் 11

1944 அக்டோபர் 15

தாரண ஆண்டு | புரட்டாசி 30

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.




இந்தியா தேசத்திலுள்ள சிற்ப அற்புதங்களுக்குள்ளே மிகப் பெரிய அற்புதம் எல்லோராவிலுள்ள கைலாஸக் குகைக் கோயிலாகும். மலையை மேலேயிருந்து குடைந்து அமைத்த இந்தக் கோயிலையும், இதிலுள்ள சிற்ப விந்தைகளையும் பற்றி இந்த இதழில் வெளியாகியிருக்கும் "அஜந்தா மார்க்கம்" என்னும் கட்டுரையில் காணலாம்.

எல்லோராவிலும் அஜந்தாவிலும் உள்ள புராதன சிற்பங்களையும் சித்திரங்களையும் விசேஷ சிரத்தையுடன் பாதுகாத்து வரும் நைஜாம் சர்க்காருக்குக் கலை உலகம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறது. இதன் பொருட்டு நமது மனப்பூர்வமான நன்றியை அவர்களுக்குச் செலுத்துவதுடன், எல்லோராவிலும் அஜந்தாவிலும் புகைப் படம் எடுப்பதற்கு நமக்கு அநுமதி கொடுத்ததின் பொருட்டும் நமது வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

போட்டோ: ஆர். நாகராஜ ராவ்.

நண்பனா எதிரியா?



இந்தியாவின் எதிர்காலத்திற்கு, சிக்கனம் மிகவும் முக்கியமானதாகவும் இன்றியமையாததாகவும் இப்போதிருப்பதைப் போல ஒரு போதும் இருந்ததில்லை. இந்த யுத்தகாலத்தில் "வாங்கும் சக்தி" நாட்டில் உபரியாயிருக்கிறது. பணம், ரொக்கம், ரூபாயைத்தான் வாங்கும் சக்தி என்கிறோம். இந்த "வாங்கும் சக்தி"யை உற்ற துணையாக ஆக்கவல்லது சிக்கனம். இந்தத் துணை உங்களுக்கும் நாட்டிற்கும் பயன்படும். இந்த வாங்கும் சக்தியைக் கொண்டு கவலையில்லாமல் செலவு செய்தால் அதுவே கொடுமையான எதிரியாகமாறும். அதாவது விலைவாசிகளை உயர்த்தும். யுத்த காலத்தில் இந்தியாவில் பொருட்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறது. தேவைகளைக் குறைத்தாலல்லது விலைவாசிகள் உயர்ந்தேதான் இருக்கும். கட்டுப்பாட்டு விதிகளால் விலைவாசிகள் உயராது தடுக்கப்பட்டிருக்கின்றன. விலைவாசிகள் உயராது தடுக்கும் இந்தப் போராட்டத்தில் உங்கள் முழு உதவியும் எமக்குத் தேவை.

புத்திசாலித்தனமாகப் பணத்தை முதலீடு செய்யுங்கள். வீடுகள், நிலங்கள், கட்டடங்கள், செம்பொருட்கள், பண்டங்கள் ஆகியவற்றின் மீது பணத்தைப் போடாதீர்கள். இந்தக் காலத்தில் மிகச் சிறந்ததும் மிகப் பத்திரமானதுமான முதலீடுகள், இன்ஷ்யூரென்ஸ், கட்டுறுதிச் சங்கங்கள், சேவிங்ஸ், தபாலாபீஸ் சேமிப்பு ஆகியவை. இவை எல்லாவற்றையும் விட அரசாங்கக் கடன் பத்திரங்களிலாவது, நேஷனல் சேவிங்ஸ் செர்டிபிகேட்டுகளிலாவது முதலீடு செய்யுங்கள்.


நீங்கள் கடைக்குப் போகும் போதெல்லாம் "இது எனக்கு உண்மையிலேயே தேவை தானா?" என்னும் கேள்வியை நீங்கள் உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். தேவையில்லை யென்று முடிவு செய்து கொள்ளுவதனால், விலைவாசிகள் குறைந்திருக்கும்படிச் செய்கிறீர்கள்; உங்கள் பணமதிப்பை உயர்த்துகிறீர்கள்; உங்கள் பணமும் உங்களுக்கு மிச்சமாகிறது.

உங்களால் இயன்றவரை
மிச்சப் படுத்துங்கள்.
மிச்சப் படுத்தியதை முதலீடு செய்யுங்கள்.


தேசியப் போர்முனையார் விடுக்கும் தேசிய வேண்டுகோள்

AAA 1111 TM

நிகழ்ச்சிச் சித்திரம்



ஸ்டாலின்கூப் இருந்த இடத்தைவிட்டு அசைய மறுத்துவிட்டபடியால், சர்ச்சில்மலை அவரைத் தேடிக்கொண்டு போகும்படி ஆயிற்று!



பிரிட்டனில் வரப்போகும் தேர்தலுக்காக அந்தந்தக் கட்சிகள் பொறிகள் அமைக்க ஆரம்பித்துவிட்டன.

-உம்மன்


இங்கிலாந்து சென்றதுமுதல்
இத்தனைகாலமும் எங்கேயோ
மறைந்து கிடந்த மாஜி வைஸ்ராய்
லார்ட் லின்லித்கோ இப்போது
பிரிட்டிஷ் அரசியலில் தலை
நீட்டப் பார்க்கிறார்!


ஆயுதப் பஞ்சம்
சாப்பாட்டுப் பஞ்சம்
பணப் பஞ்சம்
“இருட்டு விரைவில் ஒழிந்து, சீக்கிரமே பொழுது விடியும்”
என்று ஆசையோடு எதிர்பார்க்கிறார் ஸ்ரீ சியாங்கை ஷேக்!

கல்கி

மலர் 4 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 11

என்ன சேதி?

தீபாவளி மலர்

இந்த வருஷத்துக் "கல்கி தீபாவளி மலர்" தீபாவளிப் பண்டிகையன்று அநேகமாக எல்லா இடங்களிலும் கிடைக்கும். மலரில் உள்ள சித்திர அதிசயங்களைப்பற்றியோ, விஷய அற்புதங்களைப் பற்றியோ அதிகமாக நாம் எதுவும் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில், மலர் கிடைக்கப் பெற்றவர்களுக்கு அதைப் பற்றி நாம் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. கிடைக்காதவர்களுக்கு அதைப் பற்றிக் கேட்பதனால் நம் பேரில் கோபமும் விரோதமும்தான் ஏற்படும். இதற்குள்ளேயே நாம் அத்தகைய கோபத்துக்கு ஆளாக நேர்ந்திருக்கிறது! தினசரி தபாலில் வரும் நூற்றுக் கணக்கான மணியார்டர்களை மிக்க மன வருத்தத்துடன் திருப்பி யனுப்பிக் கொண்டிருக்கிறோம்! (வருகிற பணத்தைத் திருப்பி அனுப்புவதில் நமக்கு சந்தோஷம் இருக்க நியாயம் இல்லையல்லவா?)

மற்றக் காரியங்களைப் போலவே, பத்திரிகை 'சர்க்குலேஷ'னைப் பற்றியும் நாம் எப்போதும் உண்மையான புள்ளி விவரங்களையே கூறுவதென்னும் கொள்கையைக் கடைப் பிடித்து வருகிறோம். சென்ற இரண்டு வருஷங்களைப் போலவே இந்த வருஷமும் தீபாவளி மலர் 15,000 பிரதிகள் அச்சிடுவதற்குத்தான் காகிதமும் மற்ற வசதிகளும் இருந்தன. ஆனால், "கல்கி" தீபாவளி மலரை விரும்பும் நேயர்கள் தமிழ் நாட்டில் குறைந்த பட்சம் 50,000 பேர் இருப்பார்கள் என்று தோன்றுகிறது. ஆகவே, மலரை விரும்பும் மூன்று பேரில் ஒருவருக்குத்தான் மலர் கிடைக்கக் கூடும். மலர் கிடைக்காத ஆயிரக் கணக்கான நேயர்களுக்கு நமது மனமார்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறோம். அடுத்த வருஷத்திலாவது காகிதக் கட்டுப்பாடு முதலிய தடைகள் நீங்கி நேயர்கள் விரும்பும் அளவு தீபாவளி மலர்ப் பிரதிகள் அச்சிடுவது சாத்தியமாகுமென்று நம்புகிறோம்.

காலஞ்சென்ற வில்கி

"வில்கி காலமானார்" என்ற செய்தியைக் கேட்டு நாம் முதலில் ஆச்சரியப் படவோ, திடுக்கிடவோ இல்லை. காரணம், இந்தியாவில் உள்ளது போல் அமெரிக்காவிலும் சில அல்ப சந்தோஷிகள் இருப்பார்களோ,



அவர்கள் மேற்படி செய்தியைக் 'குஷி'க்காக வெளியிட்டிருப்பார்களோ என்று எண்ணியதுதான். பிறகு, நிஜமாகவே வெண்டல் வில்கி ஹிருதய நோய் காரணமாக ஒரு மாத காலம் ஆஸ்பத்திரியில் இருந்து காலமாகி விட்டார் என்ற செய்தியைப் படித்து விட்டு மிகுந்த வருத்தமடைந்தோம்.

சாதாரணமாக அயல் நாடுகளின் தலைவர்களை,

மந்திரிகளோ, பிரபலஸ்தர்களோ காலமாகி விட்டால் நாம், "ஐயோ, மனுஷர் போய் விட்டாரே!" என்று சிறிது நேரம் வருந்தி விட்டுப் பிறகு நமது காரியங்களைக் கவனிப்பது வழக்கம். ஆனால் வில்கி விஷயத்தில் நம்மால் அம்மாதிரி மேலெழுந்த வாரியாக வருத்தப்படுவதோடு நிற்க முடியவில்லை. காரணம், அவர் இந்தியாவின் விஷயத்தில் விசேஷ சிரத்தை கொண்டவர் என்பது மட்டுமில்லை; உலகப் பிரயாணம் செய்து 'ஒரே உலகம்' என்ற புத்தகம் எழுதி, அந்தப் புத்தகம் லக்ஷக் கணக்கான பிரதிகள் விற்றதால் பிரசித்தி யடைந்தார் என்பதற்காகவும் இல்லை; அதில், நேச நாடுகளின் யுத்த லட்சியத்தை உலகுக்கு மெய்ப்பிக்க வேண்டுமானால் இந்தியாவுக்கு சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி யிருப்பதற்காகவும் இல்லை; அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுடன் மேற்படி பதவிக்குப் போட்டி யிட்டுத் தோல்வி யடைந்தார் என்பதற்காகவும் இல்லை.

பரந்த நோக்கம் கொண்டவரும், இந்தியாவின் சுதந்திரத்தில் விசேஷ ஆர்வம் கொண்டவருமான ஸ்ரீ வில்கி தமது உலகப் பிரயாணத்தின்போது இந்தியாவுக்கும் வந்து மகாத்மாஜியைத் தரிசித்துப் பிரயாணத்தின் பூரண பலனையும் பெறாமற் போய் விட்டாரே என்றுதான் வருத்தப் படுகிறோம். மற்றும், உலகப் பிரயாணம் செய்து "ஒரே உலகம்" எழுதிய வில்கி இன்று தாம் எழுதியதையே தாம் பொய்யாக்கி விட்டாரே, "மறு உலகம்" ஒன்றும் இருக்கத்தான் செய்கிறது என்பதை நிரூபித்து விட்டாரே என்று எண்ணும்போது நமது வருத்தம் அளவு கடந்ததாகிறது.

சிறுகதைப் போட்டி முடிவு

கடைசியாக, நமது சிறுகதைப் போட்டிப் பஞ்சாயத்தார் தங்களுடைய தீர்க்கமான ஆராய்ச்சிகளை ஒருவாறு முடித்து, முடிவையும் தெரிவித்து விட்டார்கள். அதன் விவரங்களை மற்றொரு பக்கத்தில் காணலாம். முதல் பரிசுபெற்ற இரு கதைகளில் ஸ்ரீராம் குருசாமி அவர்களின் கதை அடுத்த "கல்கி" இதழில் பிரசுரமாகிறது. அதற்குப் பிறகு வரிசைக் கிரமமாகப் பரிசு பெற்ற மற்றக் கதைகளும் வெளியாகும். ஒவ்வொரு கதையும் பிரசுரமாகி இரண்டு வாரம் ஆனதும், பரிசுத் தொகை அனுப்பி வைக்கப்படும்.

மகத்தான வெற்றி!

[மிகவும் மகத்தானது; பிரமாதமானது; பிரம்மாண்டமானது.]

சீனத்தின் மகத்தான வெற்றியை அறிந்து அளவில்லாத மகிழ்ச்சியும் குதூகலமும் கொள்கிறோம்.

சென்ற வாரத்தில் சீனத்தில் நடந்த பெரும் போரில் ஜப்பானியர் அடியோடு முறியடிக்கப் பட்டதையும், சீனர்கள் பெரும் வெற்றி யடைந்ததையும் கேட்டுப் பொங்கி வரும் உவகையினால் துள்ளுகின்றோம்.

வெற்றியடைந்த சீனப்படை தோல்வி யடைந்த ஜப்பானியரைத் தூக்கிக் கொண்டு போய்ச் சமுத்திரத்திலே தள்ளிச் சாக அடிக்கப் போவதைக் குறித்து நமது தோள்கள் பூரித்து மேக மண்டலம் வரையில் உயர்ந்து விட்டன.

பத்து வருஷத்துக்கு மேலாகச் சீன மக்கள் மூர்க்க ஜப்பானியருடன் நடத்திய பயங்கரப் போராட்டம் கடைசியாகத் தர்மக் கட்சிக்கு ஜயத்துடன் முடிவு பெற்றதில் நமக்கு உண்டாகும் ஆனந்தமானது எல்லையில்லாமல் பெருகி நட்சத்திர மண்டலத்தையும் தாண்டிப் போய்க் கொண்டே யிருக்கிறது.

சர்வாதிகார ஏகாதிபத்திய வெறியை முறியடித்து ஜனநாயகம் அடைந்திருக்கும் இந்தப் பிரமாதமான வெற்றிக்கு பிரம்மாண்டமான உதவி செய்த பிரிட்டிஷாரையும் அமெரிக்கரையும் மனமார, வாயார, பேனா ஒடியும் வரை வாழ்த்துகிறோம்.

பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் சேர்ந்து அனுப்பிய பதினாயிரம் டாங்கிகளையும், இருபதினாயிரம் ஆகாச விமானங்களையும், ஐம்பதினாயிரம் பீரங்கிகளையும், நூறு லட்சம் குண்டுகளையும், பத்து கோடித் துப்பாக்கிகளையும் வைத்துக் கொண்டுதான் சீனர்களால் ஜப்பானியரை முறியடிக்க முடிந்தது என்பதை சீனா ஒரு நாளும் மறக்காது; உலகமும் மறக்காது; நாமும் மறக்க மாட்டோம். ஒரு வேளை இவ்வளவு பேரும் மறந்தாலும் பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் என்றென்றைக்கும் அதை மறக்காமல் நமக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை......

என்ன, வாசகர் ஐயா! ஏன் இப்படித் தலையை அசைக்கிறீர்கள்? நம்பிக்கை உண்டாக வில்லையா? எல்லாம் ஒரே அண்டப் புளுகு, ஆகாசப் புளுகாகத் தோன்றுகிறதா?

வாஸ்தவந்தான். நீங்கள் பொல்லாதவர்களாயிற்றே! அமெரிக்க நிருபர்களையும் செய்தி ஸ்தாபனங்களையும் போல் நீங்கள் ஏமாந்தவர்களா, என்ன? இப்படியெல்லாம் சரடு விட்டு உங்களை ஏமாற்றி விட முடியுமா?

தினசரிகளிலே படித்திருப்பீர்கள். அமெரிக்கக் கடற்படை தளபதி அட்மிரல் நிமிட்ஸ் பத்திரிகை நிருபர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். யுத்த அறிக்கை ஒன்றை வாசிக்க ஆரம்பித்தார். பகைவர்களை முறியடித்து அடைந்த ஒரு மகத்தான வெற்றியைப் பற்றி அந்த அறிக்கை வர்ணித்தது. ஏதோ நேற்று முந்தாநாள் நடந்த யுத்தத்தில் அமெரிக்கா அடைந்த வெற்றியாக்கும் என்று நினைத்து, அட்மிரல் வாசித்து முடிப்பதற்குள்ளேயே பகுதி பகுதியாக அச்செய்தியை நிருபர்கள் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். 'டெலிப்ரிண்டர்' முதலிய நவீன சாதனங்கள் பின் எதற்காகத்தான் இருக்கின்றன?

கடைசியிலே அட்மிரல் நிமிட்ஸ் ஒரு போடு போட்டார்: "இன்றைக்கு 750 ஆண்டுகளுக்கு முன்னால், மங்கோலிய சக்கரவர்த்தி குப்ளே கான் முறியடிக்கப் பட்டது பற்றிய யுத்த அறிக்கையை இத்தனை நேரமும் வாசித்தேன். இனி மேல்......" என்று ஆரம்பித்தார்.

நிருபர்கள் ஒருகணம் பேந்தப்பேந்த விழித்து விட்டு, முகங்களிலிருந்து தலைக்கு அரை வீசை அசடு வழிய விட்டு விட்டு, அனுப்பிய செய்திகளையெல்லாம் ரத்து செய்தார்களாம்!

ஆனால் இப்படி நமது அருமை வாசகர்களை ஏமாற்றிவிட முடியுமா? ஒரு நாளும் முடியாதுதான்.

* * *

வாஸ்தவத்தில் சீனாவில் வெற்றியுமில்லை; மண்ணாங் கட்டியுமில்லை.

சீனாவின் இராணுவ நிலைமை ரொம்ப மோசமாகி, மிக மிக நெருக்கடியாகத் தான் ஆகியிருக்கிறது.

இதை நாளது அக்டோபர் 10உ, சீனக் குடியரசு ஸ்தாபன தினத்தைக் கொண்டாடும் தருவாயில், சீனத்தின் ஒப்பற்ற தலைவர் சியாங் காய் ஷேக் பகிரங்கமாக வெளியிட்டார்.

"ஆனாலும், கவலை வேண்டாம்! எப்படியும் இன்னும் ஒரு வருஷத்துக்குள் வெற்றியைக் காண்போம். ஜயம் உண்டு, பயமில்லை மனமே!" என்று நமக்குத் தாமே தேறுதலும் கூறிக் கொண்டார்.

* * *

சீனாவிலிருந்து வரும் மேற்படி சோகப் புலம்பலின் ஒலியை இன்னும் நூறு மடங்கு சோகம் நிறைந்ததாக எடுத்துக் காட்டுவது என்னவென்றால், மற்ற எல்லாப் பகுதிகளிலேயிருந்தும் வெற்றி முழக்கங்களின் குதூகல ஒலி வந்து கொண்டிருப்பதேயாகும்.

ஐரோப்பாவின் மேற்கு அரங்கத்தில் பிரிட்டிஷ்—அமெரிக்கப் படைகள் வெற்றிமேல் வெற்றியாக அடைந்து வருவதில், நடுவில் அடைந்த ஒரு சிறு தோல்வியானது இருந்த இடந் தெரியாமல் மறைந்து போய் விட்டது.

இன்னும் பிரிட்டிஷ்—அமெரிக்க ஆகாய விமானங்கள் இரண்டாயிரம், மூவாயிரம், நாலாயிரம் என்ற கணக்கில் ஜெர்மனிக்குள்ளே படை எடுத்துச் சென்று ஜெர்மனியின் முக்கிய நகரங்களையும் தொழிற்சாலைகளையும் நொறுக்கித் தவிடு பொடி செய்து வருகின்றன.

ஐரோப்பா கிழக்கு அரங்கத்தில் ஸோவியத் சேனைகள் வடக்கு முனையில் மெமல் பட்டணத்தைக் கைப்பற்றிக் கொண்டு மேலும் முன்னேறி வருகின்றன. தெற்கேயோ, ஹங்கேரிக்குள் புகுந்து புடாபெஸ்ட் நகரை நெருங்கி விட்டன.

இதாலியிலும் பிரிட்டிஷ் படை வேகமாக முன்னேறுகிறது.

கிரீஸிலிருந்து ஜெர்மானியர் துரத்தியடிக்கப் பட்டு வருகிறார்கள்.

ஐரோப்பாவில்தான் இப்படியென்றால், பசிபிக் சமுத்திரத்தில் அமெரிக்கக் கடற்படையும் ஆகாசப் படையுமாகச் சேர்ந்து ஜப்பானியரின் மண்ணாசையிலும் கடல் ஆதிக்க ஆசையிலும் நெருப்பைக் கொட்டி வருகின்றன. தினம் ஒரு தீவைப் பிடித்தாகி விட்டது என்று செய்தி வருகிறது. "ஆயிரம் விமானங்கள் தாக்கின" என்ற செய்திகளும், ஜப்பான் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்ட செய்திகளும் அடிக்கடி வருகின்றன.

இப்படியெல்லாமிருக்கும்போது துரதிர்ஷ்டம் பிடித்த சீனா மட்டும் ஏன் மூக்கால் அழவேண்டும்? ஏன் அங்கே மட்டும் இராணுவ நிலைமை நெருக்கடியாக இருக்க வேண்டும்?

* * *

சீனாவில் ஆள் பலம் இல்லை என்றாவது, ஜப்பானியருடன் எதிர்த்துப் போராடும் ஆத்திரம் அவர்களுக்கு இல்லையென்றாவது யாரும் சொல்ல மாட்டார்கள்.

எனவே, நெருக்கடிக்குக் காரணமாயிருப்பது போதிய யுத்த தளவாடங்கள் இல்லாமைதான் என்பதில் ஐயமில்லை.

பிரிட்டனிடமும், அமெரிக்காவினிடமும் தற்சமயம் யுத்த தளவாடங்களுக்கு ஒரு குறைவுமில்லை. ஏக காலத்தில் பல போர்முனைகளில் ஆயிரக் கணக்கான விமானங்களை அனுப்பக் கூடிய சௌகரியமான நிலைமையில் அவை இருக்கின்றன.

அப்படியிருக்கும்போது சீனாவுக்கு ஒரு பத்தாயிரம் இருபதினாயிரம் போர் விமானங்களை அனுப்பி வைத்தால் என்ன? ஏன் அனுப்பவில்லை? சீனாவுக்கு அனுப்பிய உதவியை ஏன் ராத்தல் தோலா கணக்கிலும், ஆழாக்கு—உழக்கு கணக்கிலும் மதிப்பிட்டுச் சொல்கிறார்கள்?

இந்தச் சிக்கன உதவியைக் குறித்துச் சீன தளபதி சியாங்-காய்-ஷேக் மனம் உடைந்து போயிருக்கிறார் என்பதற்கு அறிகுறி அவருடைய 10உ பேச்சிலேயே வெளியாயிற்று.

நேசக் கட்சியாரின் யுத்த தளவாட உதவியைப் பற்றி அவர் குறிப்பிடவேயில்லை. வந்தனம் செலுத்தவும் இல்லை; குறை சொல்லவும் இல்லை.

பாவம்! கெஞ்சிக் கெஞ்சி அவருக்கு அலுத்துப் போய் விட்டது; புகார் சொல்வதினால் பயன் இல்லையென்பதும் அவருக்குத் தெரிந்து போய் விட்டது.

ஆகவேதான், பிரிட்டிஷ் அமெரிக்க உதவி விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமலே விட்டிருக்கிறார்.

நேசக் கட்சியாரிடம் பூரண உதவி பெறுவதற்குச் சீனம் தகுதியுள்ளது என்பதில் ஏதேனும் சந்தேகம் உண்டா? கிடையவே கிடையாது!

ஜப்பானியர் எவ்வளவு மூர்க்கப் பிடிவாதம் கொண்ட போர் வீரர்கள், யுத்த தந்திரங்களில் எவ்வளவு தேர்ந்தவர்கள் என்பதை பியர்ல் ஹார்பர், பிலிப்பைன்ஸ், மலேயா, பர்மா முதலிய இடங்களில் பார்த்தோம்.

அப்படிப்பட்ட ஜப்பானியரை எதிர்த்துச் சென்ற பத்து வருஷ காலமாகச் சீனர்கள் வீரப் போர் புரிந்து வருகிறார்கள்.

இதனால் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் அவர்கள் புரிந்திருக்கும் உதவி கொஞ்ச நஞ்சமல்ல. ஜப்பானுடைய படை பலம் முழுவதையும் பிரிட்டன் மீதும் அமெரிக்கா மீதும் திருப்ப முடியாமல் அதில் ஒரு பெரும் பகுதியைச் சீனர்கள் தங்கள்பால் திருப்பிக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா?

இதை உத்தேசித்தாவது பிரிட்டனும் அமெரிக்காவும் சீனாவுக்கு எல்லாவித மான உதவியும் செய்யக் கடமைப் பட்டிருக்கின்றன.

* * *

சரி: நேசக் கட்சியார் விஷயத்தில் சீனாவின் நேச பாவத்தைப் பற்றிச் சந்தேகிப்பதற்கு ஏதாவது இடம் உண்டா என்று பார்க்கலாம்.

இது விஷயத்தில் சீனாவுக்கும் ருஷியாவுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனிக்க வேண்டும்.

சீனாவுக்கும் ஜெர்மனிக்கும் நேர்முகமாகத் தகராறு எதுவுமே ஏற்படவில்லை. எனினும், பிரிட்டன் ஜெர்மனியின் மீது போர் தொடுத்ததும், சீனாவும் தைரியமாக ஜெர்மனியின் மேல் யுத்தப் பிரகடனம் செய்தது.

ருஷியாவின் விஷயம் என்ன?

ஜெர்மனியின் மேல் யுத்தம் நடத்துவதற்கு பிரிட்டிஷ் - அமெரிக்காவின் உதவி போதவில்லை யென்று ருஷியா ஒரு பக்கத்தில் ஓயாமல் புகார் செய்து கொண்டிருந்தது.

ஆனால் மேற்படி இரண்டு நாடுகளையும் அநியாயமாய்த் தாக்கி வலுவிலே யுத்தம் தொடங்கிய ஜப்பான் மீது நாளது வரையில் ருஷியா யுத்தம் தொடுக்கவில்லை!

எனினும், பிரிட்டனும் அமெரிக்காவும் அதிகமாக மரியாதை கொடுப்பது ருஷியாவுக்குத்தான்!


சர்ச்சில் தேடிக் கொண்டு ஓடுவது, தோழர் ஸ்டாலினைத்தான்!

சியாங்-காய்-ஷேக்கைத் தேடிச் சீனாவுக்கு ஒரு தடவையாவது சர்ச்சில் போனதுண்டா? கிடையாது! ரூஸ்வெல்ட்டும் சீனாவுக்குப் போனதில்லை.

இவர்களுடைய அந்தரங்க யுத்த தந்திர மகாநாடுகளுக்குச் சீனத் தலைவரை அழைப்பதுமில்லை.

இன்றைய தினம் சர்ச்சில் மாஸ்கோவில் இருக்கிறார். சர்ச்சிலும் ஸ்டாலினும் தங்கள் சகபாடிகளுடன் ஆறு மணி நேரம் சேர்ந்தாற்போல் விருந்து சாப்பிடுகிறார்கள். ஒருவரை யொருவர் வாழ்த்திக் கொள்கிறார்கள்; பாராட்டிக் கொள்கிறார்கள்; குலாவுகிறார்கள்.

மூர்க்க ஜப்பானியருடன் பத்து வருஷமாக வீரப் போர் நடத்தி வரும் சியாங்-காய் - ஷேக்கைக் கவனிப்பார் இல்லை.



இதற்கெல்லாம் என்ன காரணம்? ஜெர்மனியைத் தோற்க அடிப்பதில் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள சிரத்தை ஜப்பானைத் தோற்கடிப்பதில் அவர்களுக்கு இல்லை என்று யாராவது சொன்னால், அது சுத்த அறிவீனமாகும்.

ஜெர்மனியைத் தோற்கடித்த பிறகு அதன் இறகுகளைப் பிய்த்துவிட்டாவது உயிரோடு வைத்திருக்க விரும்புவார்கள்.

ஆனால் ஜப்பானை அடியோடு அழித்து நிர்மூலமாக்கும் எண்ணம் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இருக்கத்தான் இருக்கிறது.

இந்தக் காரியத்தைச் சீனாவின் மூலமாகச் செய்யத்தான் அவர்கள் விரும்பவில்லை. தாங்களே செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

"ஜப்பானியரைக் கொல்லும் தமாஷா முழுவதையும் அமெரிக்காவுக்கே கொடுத்து விட முடியாது!" என்று சர்ச்சில் சில நாள் முன்பு சொன்னார்.

பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்குமே இந்தப் போட்டியிருக்கும்போது, ஜப்பானைத் தோற்கடிக்கும் காரியத்தைச் சீனாவிடம் ஒப்படைக்க அவர்கள் விரும்பமாட்டார்கள் அல்லவா?

சீனாவின் மூலமாக ஜப்பானை ஜயிப்பதென்றால், கணக்கற்ற யுத்த தளவாடங்களையும் நவீன இயந்திர சாதனங்களையும் சீனாவுக்கு அனுப்பியாக வேண்டும். அவ்வளவிலும் சீனர்கள் பயிற்சி பெற்று விடுவார்கள்.

இயந்திர சாதனங்களைப் பெற்ற பத்து கோடி ஜப்பானியரே இன்றைக்கு இந்தப் பாடு படுத்துகிறார்களே! நாளைக்கு ஐம்பது கோடி சீனர்களும் ஐம்பது கோடி ஜப்பானியர் ஆகிவிட்டால் என்ன செய்கிறது? —இம்மாதிரி எண்ணுவது மனித இயற்கைதான். எனவே, பிரிட்டிஷ் அமெரிக்க யுத்த தந்திரத்தில் சீனாவுக்கு அபரிமிதமான யுத்தத் தளவாடங்களை அனுப்பும் திட்டம் இல்லாமலிருப்பதும் இயல்புதான்.

* * *

மேலே "மனித இயற்கை" என்று நாம் சொன்னோமே தவிர, அது நல்ல மனித இயற்கையென்று சொல்லவில்லை. உலக க்ஷேமத்துக்கு உகந்த இயற்கையும் ஆகாது.

மனித இயற்கை சில சமயம் என்ன செய்கிறதென்றால், எந்தப் பலனை வேண்டாமென்று நினைக்கிறோமோ அது ஏற்படுவதற்கான வழியிலேயே செல்லத் தூண்டுகிறது.

சீனக்காரர்கள் சாதுக்கள்; கிராமாந்தரங்களில் எளிய வாழ்க்கை நடத்துவதில் பற்றுடையவர்கள். ஜப்பானியரைப்போல் மூர்க்கத்தனமும் மண்ணாசையும் கொண்டவர்கள் அல்ல.

ஆனால், தற்சமயம் சீன விஷயத்தில் அனுஷ்டிக்கப்படும் பிரிட்டிஷ் - அமெரிக்கக் கொள்கையானது அவர்களுடைய மனதில் பெரும் மனக் கசப்பை உண்டாக்கி விடக் கூடும் என்று அஞ்ச வேண்டியதாயிருக்கிறது.

"ஜப்பானுடன் இன்னும் யுத்தமே தொடுக்காதிருக்கும் ஸ்டாலினைத் தேடிக் கொண்டு இவர்கள் ஓடுவானேன்? நம்மை இப்படி அலட்சியம் செய்வானேன்?" என்று ஐம்பது கோடி சீன மக்கள் எண்ணத் தொடங்குவார்களானால், சில வருஷ காலத்தில் அவர்கள் அவ்வளவு பேரும் ஜப்பானியர் ஆனாலும் ஆகி விடுவார்கள்.

வருங்காலத்தில் உலக க்ஷேமத்துக்கு இது உகந்தது என்று யாராவது சொல்ல முடியுமா?

* * *

எது எப்படியானாலும், சீனாவுக்கு யார் உதவி செய்தாலும் செய்யாவிட்டாலும், கடவுளுடைய உதவி அவர்களுக்கு நிச்சயம் இருக்கிறது. அதோடு இந்தியாவின் அநுதாபமும் சீனாவின் பால் கட்டாயம் இருந்து வருகிறது.

கடவுளின் உதவி எந்த விதத்தில், எந்த ரூபத்தில், எப்போது பலன் தருமென்று யாரும் சொல்ல முடியாது.

ஏழை இந்தியா, தன்னுடைய சுதந்திரத்தையே தான் தேடிக் கொள்ள முடியாத இந்தியா, அநுதாபத்தைத் தவிர வேறெதையும் சீனாவுக்கு அனுப்பக் கூடிய நிலைமையில் இல்லை.

எனவே, சீன மக்கள் கடவுளுக்கு வேலையையும் இந்தியாவின் அநுதாபத்துக்குச் செலவையும் ஏற்படுத்துவதைக் கூடிய சீக்கிரம் நிறுத்திக் கொள்ள வேண்டும். தீவிரமாய் எழுந்து ஒரு பெரு முயற்சி செய்து இந்தத் தலையங்கத்தின் தலைப்பில் நாம் போட்டதை யெல்லாம் அவர்கள் உண்மைப் படுத்த வேண்டும்.

சீனக் குடியரசு ஸ்தாபித்த 33-வது வருஷக் கொண்டாட்டத்தன்று இந்த வேண்டுகோளை நாம் விடுக்கிறபடியால், சீனர்கள் அதை அலட்சியமாய்த் தள்ளி விடமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

கல்கி' சிறுகதைப் போட்டிப் பஞ்சாயத்தார்
7.10.44 அன்று கூடி முடிவு செய்தது.

— x —

ஐநூறு ரூபாய் முதல் பரிசும், ஐந்து நூறு ரூபாய் பரிசும் ஆக ஆறு பரிசுகள் கொடுப்பதாகப் பிரகடனப் படுத்தியிருந்தது. மொத்தம் போட்டிக்கு வந்தது 1322 கதைகள். பரிசுப் பஞ்சாயத்தார்கள் சோதனை செய்து, இரண்டு கதைகள் முதல் பரிசுக்கு சமமதிப்புக்கு உரியவை என்று தீர்மானித்தார்கள். ஆகையினால் முதல் பரிசின் மொத்த ரூ. 500/-ஐயும் இரண்டாவது பரிசு ஒன்றின் மொத்த ரூ. 100/-ஐயும், இரண்டும் சேர்த்து இரு சமபாகமாகப் பிரித்து தலைக்கு ரூ. 300/- கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானித்த பரிசுகள் :

"சுயம்வரம்" — ஸ்ரீராம் [illegible]
உடையார் கோவில், அம்மாப்பேட்டை ... ரூ. 300/-

"வாழ்க்கையில் இன்பம்" — கி. ரா. கோபாலன்
82, பெரிய தெரு, கும்பகோணம் ... ரூ. 300/-

"உள்ளும் புறமும்" — ஆர்வி
18, மாரியப்ப முதலி சந்து, சின்னக் கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி ... ரூ. 100/-

"தியாகம்" — பார்வதி
கோகுலம், மைலாப்பூர், சென்னை ... ரூ. 100/-

"பாய்ச்சல் மாடு" — ஜே. அனந்தசயனம்,
11, சங்கரபத்தன் தெரு, ராமலிங்கபுரம் பெரம்பூர் பாரக்ஸ், சென்னை. ... ரூ. 100/-

"வறுமையா, பொறுமையா?" — "வேதஸ்ரீ"
வே. ரா. ஸ்ரீனிவாசன் B.A
c/o K.L. நரஸிம்ஹன்,
A.C.O. ஆபீஸ், B.N.Ry. ஹவுரா ... ரூ. 100/-

— இது ஏகோபித்த முடிவு. —

டி. கே. சிதம்பரநாத முதலியார்
எஸ். அம்புஜம்மாள்
கி. சந்திரசேகரன்
க. நா. சுப்ரமண்யம்
ரா. கிருஷ்ணமூர்த்தி

— பஞ்சாயத்தார் — 7.10.1944



வான சஞ்சாரம்

"இசைத் தேனீ"

கச்சேரிகளைப் போலல்லாது நாடகம் சினிமாக்களில் சங்கீதத்துக்குக் கிடைக்கும் நேரம் குறுகியது. அதற்குள்ளேயே பாடகர் தன்னுடைய திறமை முழுவதையும் காட்டி விடவேண்டும் என்ற ஆத்திரத்தில் அவசரமாகக் கைச்சரக்கை யெல்லாம் வெளியிடுவது சகஜம். இத்தன்மையை அக்டோபர் 3வ. திருச்சி நிலையத்தில் பாடிய மகாராஜபுரம் எம். ஆர். கிருஷ்ணமூர்த்தியின் பாட்டைக் கேட்டவர்கள் கவனித்திருக்கலாம். பந்துவராளி, மோஹனம், காபி, சாவேரி என்று அடுக்கடுக்காய் ராகங்களும் அவைகளில் உருப்படிகளும் வெகு சாலக்காய் வெளிவந்தன.

அன்று மாலையிலும் இரவிலும் சென்னை நிலையத்தில் ஒரு இனிய பெண் குரல் கேட்டது. நீண்ட கார்வைகளும், நாஸுக்கான ஸ்வர ஜாதிகளும் உபயோகித்துப் பாடினார். பாடியவர் வி. இந்திரா என்று அறிந்தேன்.

சாதாரணமாய் வீணை வாசிப்பவர்கள் எல்லோரும் கூடவே வாயால் பாடுவதில்லை. சிலர் அங்கங்கே கொஞ்சம் குரலைக் காட்டி நின்று விடுவார்கள். கச்சேரி முழுவதும் வீணையில் திறம் கொண்ட வாசிப்புடன் இழையும் குரலையும் இணை பிரியாது அமைத்துப் பாடுவதில் ஒரு அசாதாரண அழகு இருக்கிறது என்பதை, திருச்சியில் 5வ. வஸந்தா சரவணன் காண்பித்தார். ஆனந்த பைரவி உண்மையாகவே ஆனந்தத்தைக் கொடுத்தது.

அன்று மாலை சென்னையில் 5-30 மணிக்கு எம். எஸ். நடராஜய்யர் பாட்டு என்று முதலுரை கேட்டது. பிறகு இரண்டு மூன்று நிமிஷங்களுக்கு மிருதங்கம் சுருதி சேர்ப்பது தான் கேட்டது. அதன் பிறகு தான் 'ஸ்ரீ வேணுகோபாலா' என்ற கிருதி காதில் விழுந்தது. பாடகர்களுக்குக் கிடைக்கும் மிகக் குறுகிய நேரமும் இப்படிக் கழிந்து விட்டால் அவர்கள் பாடு, பரிதாபம்தான். நடராஜய்யர் பாடிய ஸிம்மேந்திர மத்யம ராகமும், கல்யாணியில் 'ஏதாவு' கிருதியும் நிதானத்துடன் விளங்கின.

அன்று இரவு 7-45க்கு சென்னை ரேடியோவில் தமிழ்ச் செய்தி முடிந்ததும் திடீரென்று ஒரு பெண் குரலில் 'மாமவஸதா' என்ற கிருதி வெளிவந்தது. முதலில் பெயர் விளம்பரம் ஒன்றும் இல்லை.

சரி, இன்று இந்நிலையத்தில் ஏதோ தகராறு என்று சந்தேகித்துத் திருச்சியைத் திருப்பினேன். ஜம் மென்று காம்போதி ராகம் நயமான குரலில் வந்து காதை நிரப்பியது. 'குயிலே, உனக்கு அனந்த கோடி நமஸ்காரம்' என்ற உருப்படி சாஹித்யத் தெளிவுடன் மனதைக் கவர்ந்தது. பாடியவர் டி. பி. ராமகிருஷ்ணன் என்று அறிந்தேன். கரஹரப்ரியாவில் தீர்க்கமாய் ஸஞ்சாரங்கள் துணிச்சலான பிடிகளுடன் தென்பட்டன. 'ராம நீயெட' கிருதியில் 'தனைக்வரு' என்ற இடத்தில் நிரவலும் ஸ்வரமும் ராக பாவப் பொலிவுடன் ஜிலுஜிலுப்பா யிருந்தன

6வ. சென்னையில் ஸ்ரீகண்டய்யரின் வீணைக் கச்சேரி போற்றத் தக்கதா யிருந்தது. வராளியில் கமகப் பொழிவு, பைரவியில் உருக்கம், கல்யாணியில் சஞ்சாரக் கோர்வையின் அழகு. மோகனத்தில் எழில் நிறைந்த பாணி.

தற்காலம் நாட்டக்குறிஞ்சி ராகம் அபூர்வமாகி விட்டது. அதை நழுவ விடாது திறமையுடன் கையாளுபவர்களும் இருக்கிறார்கள் என்பதை 7வ. சென்னையில் ராமநாதபுரம் வி. கிருஷ்ணன் நிரூபித்தார். அவர் பாடிய ஜனரஞ்ஜனி ராகமும் விறுவிறுப்பா யிருந்தது. ஸஹானாவில் தன் திறமை முழுவதையும் காட்டினார்.

இரண்டொரு ஆரம்ப சஞ்சாரங்களிலேயே ராகத்தை ஸ்புரிக்கச் செய்வதிலும், அபூர்வமாகத் தோன்றும் ராகங்களை அலக்ஷியமாய்ப் பொழிவதிலும், பிருகாவுடன் உருப்படி, நிரவல் ஸ்வரங்களைக் கையாளுவதிலும், ஆணுக்குப் பெண் சளைக்காமல் பாடக் கூடும். என்று சென்னையில் 8வ. பாடிய பி. ஸரஸ்வதி காண்பித்து விட்டார். இனிமையும் ஜீவனும் கொண்ட சாரீரம். அரிய சாதகம். ஹரிகாம்போதியும் ஹுஸேனி தந்திரமும் முதல் ஸ்தானத்துக்குப் போட்டி யிட்டன.

9வ. திருச்சியில் பாடிய நாகம்மா, கமலா இவர்களின் கானம் கவனிக்கத் தக்கதாக யிருந்தது. ஒருவர்தான் ராகம் பாடினார். தோடி விஸ்தாரமாயும் நிதானமாயும் அழகு அசைவுகள் உள்ளதாயும் காணப்பட்டது. பந்துவராளி அழுத்தமும் விறுவிறுப்பும் கொண்டிருந்தது. முகாரி ராகமும் கவனத்தை இழுத்தது.

சிறந்த ராக ஞானமுடையவர்கள் பைரவியைக் கையாண்டால், கேட்போர் மனதை எவ்வளவு உருகச் செய்யுமா மென்பது சென்னையில் 10வ. இரவு பாடிய எம். டி. பார்த்தஸாரதி பாட்டில் தெரிந்தது. இவர் சாரீரம் அசாதாரண காத்திரம் கொண்டது போல் தோன்றுகிறது. தீர்க்கமாயி பேசிய போதிலும் மேலேயே கத்திக் கொண்டிருக்காமல் கீழும் மேலும், கோர்வை யழகுடன் சஞ்சாரங்கள் நிறைந்து காணப்பட்டன. 'மகாத்ரிபுர சுந்தரி' என்ற உருப்படியின் சரணமான 'காபாடு சிம்பு' என்ற இடத்தில் கீழிருந்து மேல் மத்யமம் வரை ராகபாவ நிரவல்களை அடுக்கடுக்காய் அமைத்துப் பாடினார். லய வித்தியாசம் அதிகமாய்க் காணப்பட்டது. கல்யாணி ராகம் அழகு பிடிகளுடன் இலங்கினதோடு அதில் பாடிய 'நாதிப' என்ற சங்கீதத்தில் பெரும்பாலும் ஸ்வராக்ஷரங்களையுடைய 'ஸ்வரஸ்தானபதம்' அபூர்வ வஸ்துவாகவே காணப்பட்டது. இவருக்குப் பக்க வாத்தியமாக வயலின் வாசித்த வி. கோவிந்தசாமி நாயக்கரும் நல்ல சங்கீதத் திறமை காட்டினார்.

ஐந்து ரூபாய் பரிசு: சென்ற இதழில் வெளியான "பிரயோஜனமில்லை!" என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: ஆர். ஆர். எஸ். மணியன், திருவனந்தபுரம்.

இந்திய அரசாங்கப்


பரிசும் பத்திரங்கள் வாங்குங்கள்

பரிபூரண பாதுகாப்பு. ஒரு வருஷத்தில் இரண்டு முறை பெரும் ரொக்கப் பரிசு பெறசந்தர்ப்பம். 100 ரூபாய் தொகுதி ஒவ்வொன்றிற்கும் முதற் பரிசு ரூபாய் 50,000; ரூபாய் 20,000 கொண்ட இரண்டு இரண்டாவது பரிசுகள், ரூபாய் 5,000 கொண்ட இரண்டு மூன்றாவது பரிசுகள். ஒவ்வொரு குலுக்குதலுக்கும் மொத்த பரிசுத்தொகை 1 லட்சம். 10 ரூபாய் தொகுதி ஒவ்வொன்றிற்கும் முதற் பரிசு ரூ. 2,500; இரண்டு இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூபாய் 1,250; ஐந்து மூன்றாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூபாய் 500; 10 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூபாய் 250; ஒவ்வொரு குலுக்குதலிலும் ஒவ்வொரு தொகுதிக்கும் மொத்த பரிசுத் தொகை ரூபாய் 10,000. பரிசு பெற்ற பத்திரங்கள் மேலும் பரிசுப் போட்டிக்கு உரிமையுண்டு. வருமான வரி, சூபர்வரி, அதிக லாபவரி, நகரசபை வரி ஆகியவை இந்தப் பரிசுத் தொகைகளுக்குக் கிடையாது. பரிசு பத்திரங்கள் வாங்குவதும் எளிது. தொகையை வசூலிப்பதும் எளிது. 1949-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ம் தேதிக்குப் பிறகு நீங்கள் கொடுத்த தொகை திருப்பிக் கொடுக்கப்படலாம். முழுவிவரங்களை இந்திய ரிசர்வ்பாங்கி, இந்திய இம்பீரியல்பாங்கி, இந்திய அரசாங்க அலுவல்களைச் செய்யும் பிரிட்டிஷ் இந்திய அல்லது இந்திய சமஸ்தான அரசாங்க கஜானாக்களில் எல்லா இந்தியஆபீசுகளிலும் தெரிந்து கொள்ளலாம்.



AAA 966 TM

இந்திய அரசாங்க நிதி இலாக்கா வெளியிட்டது.



80. இவ்வளவுதானா படிப்பெல்லாம்!

கங்கையைக் கடப்பதற்காக பரதனோடு, மூன்று தாய்மார்களும் குகனும் ஒரு படகில் ஏறி வந்தார்கள். எதிர்க் கரையில் வந்து சேர்ந்தார்கள்.

அங்கிருந்து, எல்லாரும் ராமன் இருக்கும் சித்திர கூட பர்வதம் நோக்கிப் புறப்படுகிறார்கள். படகிலிருந்து இறங்கிய தாய்மார்கள் பல்லக்கில் ஏறிச் சென்றார்கள். மற்ற எல்லாருடனுமாகக் காத தூரத்தைக் கடந்து விட்டான் பரதன். எப்படிக் கடந்தான்? பக்கத்தில் வந்தவன் எப்படி வந்தான்?— பார்க்கலாம்.

இழிந்த தாயர்
சிவிகையில் ஏறத், தான்

பொழிந்த கண்ணீர்ப்
புதுப்புனல் போகிடல்

ஒழிந்தி லான்குக—
னும்உடன் ஏகிடக்,

கழிந்த னன்பல
காவதம், கானினே.

[இழிந்த தாயர் சிவிகையில் ஏற: படகிலிருந்து இறங்கிய தாய்மார் பல்லக்கில் ஏற; தான் கழிந்தனன் பல காவதம் கானினே ஆம். பரதன் பல காதங்களையும் கடந்தான் —காலினால் நடந்தே; பொழிந்த கண்ணீர்ப் புதும் புனல் போகிடல் ஒழிந்திலான்: குகனும்: கண்ணீர் வடிந்து கொண்டேயிருக்கிறது — புதிது புதிதாகக் கண்ணீர் சொட்டிக் கொண்டேயிருக்கிறது. அப்படிக் கண்ணீர் நீங்காதவனான குகன், பரதன் காலினால் நடந்து வருகிறதைப் பார்க்கிறான் — சகிக்க வில்லை அவனுக்கு.]

இந்தவிதமாக வெகு தூரம் கடந்து கடைசியாக பரத்துவாஜ முனி யிருந்த ஆசிரமத்தை வந்தடைகிறான் பரதன்.



பரத்துவாஜர் என்றால் தவத்தில் மிக உன்னத நிலையை அடைந்தவர். உலகமெல்லாம் அங்கீகரித்த தவ சிரேஷ்டர். அவரால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை என்று சொல்லலாம்.

அவர் பல வேதியரோடு வந்து பரதனை வரவேற்கிறார். பரதனும் அவரை வணங்குகிறான்.

வந்த மாதவத்
தோனைஅம் மைந்தனும்
தந்தை யாமெனத்
தாழ்ந்து வணங்கினான்;

இந்து மௌனிஅன்—
றனும் இரங்கினன்,
அந்த மின்நலத்(து)
ஆசிகள் கூறினன்.

[இந்து மௌனி அன்றனும் இரங்கினன்: சந்திரனைத் தலையில் தரித்த சிவபிரானை யொத்த பரத்துவாஜ முனிவரும் பரதன் நடந்து வந்ததையும் அவனது மௌனத்தையும் பார்த்து இரக்கங்கொண்டான்; அந்த மின் நலத்து ஆசிகள் கூறினன்: முடிவில்லாத ஆன்ம லாபத்தைத் தர வல்ல ஆசிமொழிகளைச் சொன்னார்.]

ஆசி வார்த்தைகள் எல்லாம் சொல்லி விட்டு, பரதனைப் பார்த்து, "ஏனப்பா, உனக்குக் கொடுத்த ராஜ்யத்தை பரிபாலனம் பண்ணலாமே. ஏன் இந்தக் கோலத்தோடு இங்கே வருகிறாய்?" என்று முனிவர் கேட்கிறார்.

"எடுத்த மாமுடி
சூடி,நின் பால்இயைந்(து)
அடுத்த பேர்அர(சு)
ஆண்டிலை, ஐய,நீ
முடித்த வார்சடை
யோடும்மு னிவர்தூ(சு)
உடுத்து நண்ணுதற்(கு)
உற்றுள(து) யாதெ'ன்றான்.

[எடுத்த மாமுடி சூடி: அழகாய் உயர்ந்துள்ள கிரீடத்தைத் தரித்துக்கொண்டு; நின் பால் இயைந்து அடுத்த பேர் அரசு: நீ விரும்ப வில்லைதான். ஆனாலும் தாய் தந்தையர்களின் விருப்பத்தின்படி உன் னிடம் வந்தது ராஜ்யம். அதை; முனிவர் தூசு: வனத்திலுள்ள முனிவர்கள் உடுப்பதற்கான மரவுரியை; நண்ணுதற்கு உற்றுளது யாது: இந்த வனம் நோக்கி வருவதற்கு ஏற்பட்ட காரணம் என்னவோ?]

"ஏன் ராஜ்யத்தை ஆளவில்லை? உடம்பை ஏன் கெடுத்துக் கொண்டாய்?" என்று மிக்க பரிவுடன் முனிவர் கேட்டார். அவ்வளவுதான்; வந்து விட்டது கோபம் பரதனுக்கு.


சினக்கொ டுந்திறல்ச்
சீற்றவெம் தீயினன்,
மனக்க டுப்பினன்,
மாதவத்(து) ஓங்கலை,
'எனக்(கு)அ டுத்த(து)இ
யம்பிலை நீ'என ;—
உனக்(கு)அ டுத்ததும்
அன்(று),உர வோய்!' என்றான்.

[சினக்கொடுந்திறல் சீற்றவெம் தீயினன்: உள்ளத்தில் பொங்கிய கோபமானது எந்தக் கொடுமையும் செய்ய வல்ல கோபத்தீயாய் முகத்தில் வெளியாயிற்று; மனக் கடுப்பினை: என்னடா, இந்த ரிஷி கூட அக்கிரமக்காரனாக அல்லவா இருக்கிறான் என்ற எரிச்சலுக்கு ஆளான பரதன்; மாதவத்து ஓங்கலை: தவக் குன்று என்று சொல்லும்படியான முனிவரைப் பார்த்து; என: என்று; உரவோய்: அறிவிற் சிறந்த முனிவரே.]

பரதனுடைய மனசிலுண்டான கோபம் செய்யுளில் அபூர்வமான உருவம் பெற்றிருக்கிறது. "நீர் சொன்னது எனக்கு ஒவ்வாதது. அது போகட்டும், நீர் ஒரு ரிஷியாயிற்றே, இப்படிச் சொன்னது உம்முடைய பதவிக்குக் கொஞ்சங்கூட அடுக்காதது" என்கிற கோப பாவம் அருமையாய் வந்திருக்கிறது.

'எனக்க டுத்த(து)இ
யம்பிலை நீ'என
'உனக்க டுத்ததும்
அன்(று)உர வோய்!'என்றான்.

பல்லைக் கடித்துக்கொண்டு கடைசி அடியைச் சொல்லுகிறான். உரவோய்: "சாஸ்திரங்களையெல்லாம் படித்து என்ன ஆயிற்று? குட்டிச்சுவர்தான்!" என்பது பாவம்.



கும்பகர்ணன்!

"நான் ராத்திரி படுத்தால் வெய்யில் மேலே பட்டால்தான் விழித்துக் கொள்வேன்."

"அவ்வளவு சீக்கிரம் உதயத்துக்கெல்லாம் எழுந்து விடுவீர்களா? பேஷ்!"

"இல்லை. இல்லை, என் அறையின் ஜன்னல் மேற்குப் புறம் பார்த்திருக்கிறது!"



சிதைந்த உள்ளம்

பகீரதன்

மணல்மேடு மாணிக்கம் பிள்ளை என்றால் அழாத குழந்தைகூட அழும். அவ்வளவு பிரசித்தம். அந்தக் காலத்துச் செல்வந்தர்களில் தலையானவர் அந்த வட்டாரத்திலேயே அவர்தான். அவருடைய ஒரே ஒரு தங்கமான பையன் தான் தங்கராஜன்.

மாணிக்கம் பிள்ளையின் தூரபந்துவும் அவருடைய அன்புக்குப் பாத்திரமானவருமான ஒருவர் தன் அருமை மகள் பத்மாவதியை பிள்ளையிடம் விட்டுவிட்டு வெளிநாடு சென்றவர் திரும்பியே வரவில்லை. அதனால், பத்மாவும் தங்கராஜனும் ஒன்றாகவே வளரும்படி நேரிட்டு விட்டது.

அழகெல்லாம் ஒன்றே உருவான குழந்தையாக இருந்தாள் பத்மா. பத்மாவின் பால்வடியும் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவளைத் தவிர, வேறு யாரையும் தான் மருமகளாக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று உறுதி கொண்டார் மாணிக்கம் பிள்ளை.

கள்ளங் கபடமற்ற பத்மாவின் அழகு ததும்பும் கண்களையே பார்த்துக் கொண்டு எத்தனை நாழி வேண்டுமானாலும் இருக்கலாம். பத்மாவை அழவிட்டு வேடிக்கை பார்ப்பதில் தங்கராஜனுக்குத் தனி ஆனந்தம். அவள் சிரிப்பதைவிட அழுவதில்தான் அவன் அழகைக் கண்டான்.

அவள் தன் சின்னக் கைகளால் தங்கராஜனின் கன்னங்களைப் பொத்திக் கனிவு ததும்புங் குரலில், "நீ என்னைத்தானே கலியாணம் செய்து கொள்வாய்?" என்று தங்கராஜனைக் கேட்பாள்.

"உன் அழகுக்கு உன்னைத்தான் கலியாணம் செய்து கொள்ளணும்!" என்பான் தங்கராஜன்.

"அப்படின்னா நீ என்னைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டாயா?"

"மாட்டேன், மாட்டவே மாட்டேன்" என்று புன்னகை ததும்பச் சொல்லுவான் தங்கராஜன்.

பத்மாவதி தேம்பித் தேம்பி அழுது கொண்டே மாணிக்கம் பிள்ளையிடம் போய், "மாமா! அத்தான் என்னைக் கலியாணம் செய்து கொள்ளாதாம்" என்று சொல்லுவாள்.

"அவன் கிடக்கிறான்! அவன் யாரு உன்னைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன் என்று சொல்லுவதற்கு?" என்று சொல்லிக் கொண்டே, குழந்தை பத்மாவை அன்போடு அணைத்துக் கொள்வார் மாணிக்கம் பிள்ளை.

★

மனிதர்களின் மனத்தை எதற்கு ஒப்பிடுவது என்றே தெரியவில்லை. நிமிஷத்துக்கு நிமிஷம் மாறி விடுகிறது. நேற்று வரை நம் மனசுக்குப் பிடித்திருந்தவர்கள் இன்று ஏனோ கசந்து விடுகிறார்கள். பத்மாவதிதான் தனக்கு ஏற்ற மருமகள் என்று எண்ணிக் கொண்டிருந்த மாணிக்கம் பிள்ளையின் மனசு மாறி விட்டது. தன் பிள்ளைக்குத் தன்னைவிடப் பணக்காரக் குடும்பத்தில் கலியாணம் செய்து வைக்க வேண்டும் என்ற ஆசை தோன்றிவிட்டது. இதைத் தங்கராஜனிடம் தெரிவிக்கவோ இஷ்டமில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தார்.

இந்தச் சமயத்தில் காலேஜ் படிப்பை முன்னிட்டு, தங்கராஜன் பத்மாவைப் பிரிந்து சென்னைக்குப் போகும்படி நேர்ந்து விட்டது. பத்மாவிடம் தன் உயிரை வைத்துவிட்டு வெறும் உடலுடன் சென்னை வந்து சேர்ந்தான் தங்கராஜன்.

சென்னைக்கு வந்த இரண்டு மூன்று தினங்கள் வரையில் தங்கராஜன் மனசு நிம்மதியற்று அலைந்து கொண்டிருந்தது. ஆனால், நாளடைவில் அவனுடைய மனசில் நிம்மதி ஏற்பட்டு விட்டது. 'இனற்று ஜலத்தை வெள்ளமா கொண்டு போய்விடப் போகிறது' என்று தன் மனசைத் தானே தேற்றி சமாதானப்படுத்திக் கொண்டான்.

இப்படி நாட்கள், வாரங்கள், மாதங்கள் மறைய வருஷமும் முடிந்தது.

★

"நாளைக்கு வருகிறேன்" என்று ஒரு அவசரத் தந்தியைத் தன் தகப்பனருக்கு அடித்துவிட்டு, ரொம்ப ஆவலோடு பத்மாவதிக்குப் பிடித்தமான சில சாமான்களை வாங்கிக் கொண்டு ஊருக்குக் கிளம்பினான் தங்கராஜன்.

தான் இறங்கப் போகும் ரயில்வே ஸ்டேஷன் நெருங்க நெருங்க, தங்கராஜன் மனசு வெகு வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. மனோ வேகத்தோடு ரயில் போட்டி போட முடியுமா? ரயில் என்னமோ நடப்பது போல்தான் அவனுக்குத் தோன்றியது.

மணிக்கு நாற்பது மைல் வேகத்தில் போகும் ரயிலின் வேகத்தையே பொறுக்க முடியாத தங்கராஜனால் மாட்டு வண்டியின் வேகத்தை எப்படிப் பொறுக்க முடியும்?

பத்மாவைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலின் பலன், வண்டிக்காரனை உள்ளே அனுப்பி விட்டு, அவனே வண்டியை ஓட்ட வேண்டியதாயிற்று!

வண்டிச் சத்தத்தைக் கேட்டவுடனே வாசலில் பத்மா வந்து நிற்பாள் என்று எண்ணிக்கொண்டு வந்த தங்கராஜன் ஏமாற்றமடைந்தான். தன் தகப்பனார் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் இயந்திரம்போல் பதில் சொன்னான். பைத்தியம் பிடித்தவனைப் போல் அங்கு மிங்குமாக வீடு பூராவும் பத்மாவைத் தேடினான்.

கடைசியில் தன்னையும் மீறி, "பத்மா எங்கே?" என்று கேட்டே விட்டான்.

"சென்ற மாதம் பத்மாவின் தந்தை வந்திருந்தார். நான் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் பத்மாவை அழைத்துக் கொண்டு போயே விட்டார். இந்த விஷயத்தை உடனே தெரிவித்தால் உன் படிப்புக்கு ஏதாவது பங்கம் வந்து விடுமோ என்று பயந்து பேசாமலிருந்து விட்டேன்" என்றார் மாணிக்கம் பிள்ளை.

இப்படிச் சொல்லும்போது உண்மையை ஒளித்த அவரது உள்ளம் மிகவும் வேதனை அடைந்தது. அடுத்த கணத்தில், "உனக்கு என்னைப் போன்ற ஒரு பணக்காரப் பெண்ணைக் கலியாணம் செய்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்தால், நான்தான் பத்மாவை அவளுடைய அப்பாவுடன் பலவந்தமாகக் கூட்டி அனுப்பினேன்!" என்று உண்மையைச் சொல்லிவிட எண்ணினார். ஆனால் அவர் மனம் அதற்கு ஏனோ இடங் கொடுக்கவில்லை.

"நல்ல படிப்பு! நல்ல அப்பா!" என்று முணுமுணுத்தான் தங்கராஜன்.

இந்தச் சமயத்தில், "ஸார், போஸ்ட்!" என்றான் தபால்காரன்.

பத்மாவிடம் இருந்துதான் கடிதமோ என்று கன வேகமாக ஓடினான் தங்கராஜன்.


ஆம், பத்மாவிடமிருந்துதான். ஆவலோடு அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான்.

"உங்களையே நம்பி வாழ்ந்த பாவிக்கு......" என்று படிக்கும்போதே அதனுள் இருந்த அவளுடைய கலியாணப் பத்திரிகை அவனுக்குக் காட்சியளித்தது.

அடுத்த கணம் உலகமே சுழலுவது போல் இருந்தது அவனுக்கு. நடைபிணம்போல் இப்படியும் அப்படியுமாக இரண்டு மூன்று நாட்கள் நடமாடிக் கொண்டிருந்த அவன், திடீரென்று ஒருநாள் காணமற் போய் விட்டான்!

அவன் சென்று ஆறு வருஷங்கள் ஆகிறது; ஆசாமி எங்கே இருக்கிறான் என்றே தெரியவில்லை.





குழந்தைகளுக்கு ஆரோக்கியத்துடன் திரேக புஷ்டியும் முகமலர்ச்சியையும் கொடுப்பது பேரீஸ் பிஸ்கட்டுகள் என்று ஒவ்வொரு தாய் தந்தையர்களும் அறிந்திருப்பதால் அவர்கள்

எப்பொழுதும் பேரீஸ் பிஸ்கட்டுகளையே விரும்புகிறார்கள்

பெரீஸ்
பிஸ்கட்ஸ்

குழந்தைகளைப் போஷித்து வளர்க்கும் ஆகாரம்

சிற்றுண்டிகளுக்கு சிறந்ததோர் உணவு.

PERRY & COMPANY BISCUITS MANUFACTURERS, USILAMPATTI



அத்தியாயம் 23

அசோகபுரத்தில்

காஞ்சிமா நகரத்திலிருந்து ஏழு காத தூரத்தில், தில்லைப் பதிக்குப் போகும் மார்க்கத்தில், அசோகபுரம் என்னும் ஊர் இருந்தது. இந்த ஊரின் மத்தியில், பரத கண்டத்தை ஒரு குடை நிழலில் ஆண்ட சக்கரவர்த்திகளுக்குள்ளே ஒப்புயர் வற்ற தர்ம சக்கரவர்த்தியான அசோகவர்த்தனர் தேசமெங்கும் நிலை நாட்டிய ஸ்தம்பங்களில் ஒன்று கம்பீரமாய் நின்றது.

ஒரு காலத்தில் இந்த அசோகஸ்தம்பத்தைச் சுற்றியிருந்த புத்த விஹாரங்களில் ஓராயிரம் புத்த பிக்ஷுக்கள் வாசம் செய்தார்கள். புத்த மதத்தைச் சேர்ந்த கிரகஸ்தர்கள் வாழ்ந்த ஆயிரக்கணக்கான வீடுகளும் இருந்தன. மாலை நேரத்தில் புத்த சைத்யங்களில் பகவான் புத்தருக்கு ஆராதனை நடக்கும்போது தூபங்களிலிருந்து எழும் நறுமணப் புகையானது ஊரையெல்லாம் கவிந்திருக்கும். நூற்றுக் கணக்கான மணிகள் கணகணவென்று ஒலித்துக்கொண்டிருக்கும். புத்தரின் சந்நிதிகளில் ஆயிரக்கணக்கான தீபங்கள் ஜொலித்துக் கொண்டிருக்கும். பிக்ஷுக்களும், கிரகஸ்தர்களும் கையில் புஷ்பம் நிறைந்த தட்டுக்களை ஏந்திக்கொண்டு பத்தி பத்தியாகச் சைத்தியங்களுக்குப் போய்க் கொண்டிருப்பார்கள்.

அத்தகைய அசோக புரமானது இப்போது பாழடைந்து நிர்மானுஷ்யமாய்க் கிடந்தது. சைத்யமும் விஹாரமும் சேர்ந்தமைந்த ஓரே ஒரு கட்டிடத்திலே தான் இப்போது ஒரு சிறு தீபத்தின் ஒளி காணப்பட்டது. மற்றக் கட்டிடங்கள் பெரும்பாலும் இடிந்து தகர்ந்து பாழாய்க் கிடந்தன. இடியாத கட்டிடங்களில் இருள் சூழ்ந்திருந்தது.

தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அசோக சக்கரவர்த்தியால் நிலை நாட்டப்பட்ட தர்மபோதனை ஸ்தம்பம் மட்டும், கார்த்திகை மாதத்தின் தாவள்யமான சந்திரிகையில், "தர்மத்துக்கு என்றும் அழிவில்லை" என்பதை ஸ்தாபித்துக் கொண்டு தலை தூக்கி நின்றது.

இந்த அசோக புரத்துக்குத்தான் இருட்டி இரண்டு நாழிகைக்குப் பிறகு ஆயனரும் சிவகாமியும் மற்றவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் அசோகருடைய ஸ்தம்பத்தின் அருகில் வந்தபோது ஆயனர் சற்று நின்று, வானை நோக்கி நெடிதோங்கி நின்ற அந்த ஸ்தம்பத்தை அண்ணாந்து நிலா வெளிச்சத்தில் பார்த்தார். அதுவரை அவர்களுக்குள் நிலவிய மௌனத்தைக் கலைத்து, "ஆஹா! அசோக சக்கரவர்த்தி எத்தகைய சர்வோத்தமர்! உலகத்திலே தோன்றும் அரசர்கள், சக்கரவர்த்திகள் எல்லாம் அசோகரைப் போன்றவர்களாயிருந்தால், இந்தப் பூவுலகம் எவ்வளவு ஆனந்த மயமாயிருக்கும்? யுத்தம் என்னத்திற்கு? பகைமை என்னத்திற்கு?

ஒருவருடைய இரத்தத்தை ஒருவர் சிந்துவது என்னத்திற்கு? பூவுலக மாந்தர்கள் எல்லாம் ஒருவருக் கொருவர் அன்பு செய்து கொண்டு ஆனந்தமாய் வாழக்கூடாதா?'' என்றார்.

அப்போது சிவகாமி குறுக்கிட்டு, ''அப்பா! இதென்ன? சற்று முன்னேலேதான் உங்களுக்கும் கத்தி எடுத்துக் கொண்டு யுத்தம் செய்ய ஆசை உண்டாவதாய்ச் சொன்னீர்கள். இப்போது அன்பு, ஆனந்தம் என்கிறீர்களே? உங்களுடைய மனது இப்படிச் சஞ்சலம் அடைந்து நான் பார்த்ததேயில்லை!'' என்றாள்.

''உண்மைதான், சிவகாமி! என் மனது இப்போதெல்லாம் ஒரு நிலையில் இல்லை. புத்த பகவான் இந்த உலகத்தில் அன்பின் ஆட்சியை நிலை நாட்டப் பார்த்தாரே? அவருடைய பிரயத்தனம் ஏன் வீணாகப் போயிற்று என்பதை நினைத்து என் மனம் சஞ்சலப்படுகிறது'' என்றார் ஆயனர்.

புத்த பிக்ஷு அப்போது வாய் திறந்து, ''ஆயனரே! புத்த பகவானுடைய போதனையை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் மனித குலத்துக்கு இன்னும் ஏற்படவில்லையே! அதற்கு என்ன செய்வது?'' என்றார்.

யாரும் எதிர்பாராதபடி அப்போது குண்டோதரன் சம்பாஷணையில் கலந்து கொண்டான்:—

''மனிதகுலம் என்று பொதுப்படையாகச் சொன்னால் என்ன பிரயோஜனம், அடிகளே! பிராணிகளிலே புலியும் இருக்கிறது, பசுவும் இருக்கிறது. ஜந்துக்களிலே பாம்பும் இருக்கிறது, அணிலும் இருக்கிறது. அது போலவே மனிதர்களுக்குள்ளும் எத்தனையோ வித்தியாசம் இருக்கிறது. மௌரிய வம்சத்து அசோக வர்த்தனரைப் போலவேதான் நமது மகேந்திர பல்லவரும் தம் ராஜ்யத்தில் அன்பு மதத்தை ஸ்தாபிக்க முயன்றார். யுத்தம் என்பதே வேண்டாம் என்று நினைத்தார். அதைக் கெடுப்பதற்கு ஒரு புலிகேசியும், ஒரு துர்விநீதனும், ஒரு பாண்டியனும் புறப்பட்டு வந்தால், அவர் என்ன செய்வார்? பூலோகத்தில் பாம்பு இருக்கும் வரையில் கீரிப்பிள்ளையும் இருக்க வேண்டியதுதான். கீரிப்பிள்ளை இல்லாவிட்டால், மனிதனாவது தடியை எடுத்துப் பாம்பை அடித்துத்தானே தீர வேண்டும்?''

''அடே அப்பா! நமது குண்டோதரன் இவ்வளவு கெட்டிக்காரன், வாசாலகன் என்று எனக்குத் தெரியவே தெரியாதே!'' என்றார் ஆயனர்.

புத்த பிக்ஷு அருவருப்புடனும் ஆத்திரத்துடனும் அவனை நோக்கினார்.

சிவகாமி, ''குண்டோதரன் சொல்வது நியாயம், அப்பா! உலகத்தில் பொல்லாதவர்கள் இருக்கும் வரையில், அவர்களை அடக்கக்கூடிய வீர புருஷர்களும் வேண்டும் அல்லவா?'' என்றாள்.

''ஆம், சிவகாமி, ஆமாம்! அது மட்டுமல்ல, உலகத்தில் எல்லாம் அன்பு மயமாய்ப் போய் விட்டால், வீரம் என்பதே இல்லாமற் போய் விடும். வீரம் இல்லாத உலகம் என்ன உலகம்? வீரம் இல்லாவிட்டால், அப்புறம் கதை ஏது, காவியம் ஏது, கலைதான் ஏது?'' என்றார் ஆயனர்.

குண்டோதரன், ''குருவே! நான் ஒன்று சொல்லட்டுமா? இந்த அசோகர் ஸ்தம்பம் இங்கே வெறும் ஸ்தம்பமாக நின்று கொண்டிருப்பதில் யாருக்கு என்ன பிரயோசனம்? இதிலுள்ள உபதேசத்தைப் படித்து, படித்து விட்டதற்காக அதைப் பின்பற்றி நடப்பார் யார்? இந்த ஸ்தம்பத்தை என்ன செய்ய வேண்டும் என்று நான் சொல்லட்டுமா?'' என்று கூறிக் கொண்டே குண்டோதரன் ஸ்தம்பத்தைக் கையினால் தட்ட, அது 'டாண்! டாண்!' என்று ஒலித்தது.

''நல்ல எஃகினால் செய்த ஸ்தம்பம்; இதைக் கொல்லன் உலையில் போட்டு உருக்கி, வாள்களாகவும் வேல்களாகவும் செய்ய வேண்டும். இதை உருக்கினால், குறைந்த பட்சம் ஆயிரம் வாள்களும் வேல்களும் செய்யலாம்!'' என்றான் குண்டோதரன்.

* * *

அசோக ஸ்தம்பத்தினருகில் மேற்கண்ட சம்பாஷணை நடந்து கொண்டிருக்கையில் நாகநந்தி சற்று முன்னே

லேயே நடந்து சென்று அருகிலே இருந்த புத்த விஹாரத்தை அடைந்தார். அதே சமயம் விஹாரத்துக்குள்ளேயிருந்து வயோதிக பிக்ஷு ஒருவர் கையில் தீபத்துடன் வாசலில் வந்தார். அந்தத் தீபத்தின் வெளிச்சத்தில் விஹாரத்தின் வாசலிலேயே நின்றுகொண்டு, பிக்ஷு குண்டோதரன் கொண்டு வந்த ஓலையைப் படித்தார். அப்போது அவருடைய முகத்தில் உண்டான மாறுதல்களைத் தீபச் சுடரின் சிவந்த ஒளியில் பார்த்துக் கொண்டிருந்த வயோதிக பிக்ஷுவே பயந்துபோனார் என்றால், மற்றவர்கள் பார்க்காததே நல்லதாய்ப் போயிற்று என்று சொல்ல வேண்டும்.

நாகநந்தி ஓலையைப் படித்து முடித்ததற்கும் ஆயனர் முதலியோர் விஹாரத்தின் வாசலில் வந்ததற்கும் சரியாயிருந்தது. உடனே அவர் தமது முகத்திலும் குரலிலும் அமைதி வருவித்துக்கொண்டு, மற்றொரு பிக்ஷுவைப் பார்த்து, "சுவாமி! இவர்கள் எல்லாம் ஐந்தாறு தினங்கள் இங்கே தங்கியிருக்கும்படி நேரிடலாம். அதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டும்" என்று கூறினார். பின்னர், ஆயனரைப் பார்த்துச் சொன்னார்:—

"ஆயனரே! உம்முடைய சீடனுக்கு உண்மையில் நான் நன்றி செலுத்த வேண்டும். இந்த ஓலையில் மிகவும் முக்கியமான விஷயந்தான் அடங்கியிருக்கிறது. இதைக் கொண்டு வந்தவனை ஏரியிலே தள்ளினாலும் ஓலையையாவது கொண்டு வந்தானல்லவா? இந்த ஓலையில் அடங்கிய விஷயத்தைக் கவனிப்பதற்காக நான் அவசரமாய்ப் போக வேண்டியிருக்கிறது. ஒருவேளை இன்று இரவே கிளம்பிச் செல்வேன். திரும்பி வருவதற்கு இரண்டு மூன்று நாள் ஆனாலும் ஆகலாம். அது வரையில் நீங்கள் இங்கேயே சுகமாகத் தங்கி இருங்கள். இந்த புத்த பிக்ஷு கூடியவரையில் உங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பார்! மேலும் உங்களுடைய ஒத்தாசைக்குக் குண்டோதரனும் வந்து சேர்ந்துவிட்டானல்லவா?"

இந்தக் கடைசி வாக்கியத்தைச் சொல்லும் போது குண்டோதரனுடைய மார்பையே கீறி உள்ளே பார்ப்பது போல் பார்த்த நாகநந்தி மறு கணம் சிவகாமியை நோக்கி, கனிவு ததும்பிய குரலில், "சிவகாமி! உங்களை அழைத்துக் கொண்டு வந்து இப்படி நடு வழியில் விட்டுவிட்டுப் போகிறேனே, என்று நினைக்காதே! மிகவும் அவசர காரியமானபடியால்தான் போகிறேன். கட்டாயம் திரும்பி வந்து உங்களுடன் சேர்ந்துகொள்வேன்" என்றார்.

அநேகமாக எல்லாப் புத்த விஹாரங்களிலும் உள்ளதுபோல், இங்கும் நடுவில் புத்தர் சந்நிதி இருந்தது. இரண்டு பக்கத்திலும் பிக்ஷுக்கள் வசிப்பதற்குரிய அறைகள் இருந்தன. ஒரு பக்கத்து அறைகள் ஆயனருடைய குடும்பத்துக்காக ஒழித்துக் கொடுக்கப்பட்டன.

இன்னொரு பக்கத்திலிருந்த இரண்டு அறைகளுக்கு நாகநந்தி சென்றார்.

அத்தியாயம் 24

தோற்றது யார்?

சிவகாமிக்கு அன்றிரவு வெகு நேரம் வரையில் தூக்கம் வரவில்லை. அன்று குண்டோதரன் கூறிய விஷயங்களையெல்லாம் எண்ணி எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தாள். குமார சக்கரவர்த்தியைப் பற்றி நாகநந்தி கூறிய அவதூறுகளைத் தான் முழுதும் நம்பிவிட்டதை நினைந்து வெட்கினாள். நாகநந்தியின் பேரில் அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது. அவருடைய பொய்மொழிகளைக் குறித்துக் கேட்டு, அவரை மட்டந்தட்ட வேண்டுமென்ற ஆவல் அவள் மனதில் பொங்கிக் கொண்டிருந்தது. அதற்குப் பயந்து கொண்டுதான் அவர் ஒருவேளை இரவுக்கிரவே ஓடப் பார்க்

கிறாரோ என்ற எண்ணமும் அவளுக்கு ஏற்பட்டது. ஆனாலும் அவர் எங்கே போய்விடப் போகிறார்? திரும்பி வரத்தானே செய்வார்? அதற்குள்ளே, குமார சக்கரவர்த்தி செய்யப் போகும் வீரப்போரைக் குறித்து இன்னும் விவரங்கள் தெரிய வரலாம். அப்போது இன்னும் அழுத்தமாக அவரிடம் பேசி அவருடைய பொய்யை நிரூபிக்கலாமல்லவா?

இத்தகைய எண்ணங்களுக்கிடையில் மாமல்லரின் விருப்பத்தின்படி தான் வீட்டில் இல்லாமற் போனதுபற்றி அவருடைய கோபம் எத்தகையதாயிருக்குமோ என்ற கவலையும் தோன்றிக் கொண்டிருந்தது. அதை அவ்வளவு மன்னிக்க முடியாத பெருங் குற்றமாக மாமல்லர் கொள்ள மாட்டார் என்று அவள் தன்னைத்தானே ஆறுதல் செய்து கொண்டாள். இவ்விதம், பலவாறாகச் சிந்தித்துக் கொண்டிருந்து கடைசியில் தன்னையறியாது மேலிட்டு வந்த களைப்பினால் சிறிது கண்ணயர்ந்தாள்.



அவள் அரைத் தூக்கமாயிருந்த போது, சமீபத்தில் எங்கேயோ பெரும் கூக்குரலைக் கேட்டுத் தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்திருந்தாள். கவனித்துக் கேட்ட போது, 'ஐயோ முறையோ' என்று குண்டோதரன் ஓலமிடும் சத்தமும், அத்துடன், டக் டக் டக் டக் என்று குதிரை பாய்ந்து செல்லும் சத்தமும் கலந்து கேட்டன. ஆனால் குதிரையின் சத்தம் வரவரக் குறைந்து கொண்டு வந்தது.

அசந்து தூங்கிய ஆயனரைச் சிவகாமி எழுப்பினாள். இருவரும் வாசலில் வந்து பார்த்த போது, அங்கே ஓலமிட்டுக் கொண்டிருந்த குண்டோதரன், "ஐயோ! குருவே! என்னுடைய குதிரையைப் பிக்ஷு திருடிக் கொண்டு போய் விட்டார்!" என்று கூச்சலிட்டான். ஆயனர் அவனுக்கு, "அப்பனே! அந்தக்

பிக்கை உண்டாகவில்லை. ஏதோ உளறிக் கொட்டுகிறான். ஒரு வேளை கனவு கண்டானோ, என்னமோ என்று நினைத்தார்கள்.

அப்போது குண்டோதரன், "குருவே! என்னுடைய அருமைக் குதிரையை விட்டுவிட்டு என்னால் தனியே யிருக்க முடியாது. எப்படியாவது அதைத் திரும்பப் பிடித்துக் கொண்டு வந்து சேர்வேன்!" என்று சொல்லி விட்டு, குதிரை போன திசையில் அவனும் ஓடி மறைந்தான்.

* * *

ஆயனரும் சிவகாமியும் அசோக புரத்துக்கு வந்து ஐந்து தினங்கள் ஆயின.

முதல் மூன்று நாள் விசேஷம் ஒன்றும் நடைபெறவில்லை. சிவகாமிக்குப் பொழுது போவதே கஷ்டமா யிருந்தது. ஆயனருக்கோ அங்கிருப்பது அதைவிடக் கஷ்டமா யிருந்தது. ஆனால் புத்த பிக்ஷுவின் துணையை நம்பி வந்தவர்க ளாகையால், அவருடைய யோசனை இல்லாமல் மேலே எங்கே போவது என்பதை ஆயனரால் நிச்சயிக்கக் கூடவில்லை. சிவகாமிக்கோ குண்டோதரன் கூறிய விவரங்களைக் கேட்ட பிறகு மேலே போகும் ஆவலே இல்லாமல போய் விட்டது. "திரும்பிக் காஞ்சிக்குப் போனால் என்ன?" என்றுகூடத் தோன்ற ஆரம்பித்து விட்டது.

இப்படி யிருக்கையில் அவர்கள் அசோகபுரத்துக்கு வந்த நாலாம் நாள் இரவு சில அபூர்வ சம்பவங்கள் நடைபெற்றன.

அன்று அஸ்தமன நேரத்தில் எங்கேயோ வெகு தூரத்தில், வானமுகட்டின் அருகில், இடை விடாமல் இடி இடிப்பது போன்ற சத்தம் முதலில் வெகு இலேசாகக் கேட்டது. உற்றுக் கேட்கக் கேட்க, சத்தம் அதிகமாகி வந்ததாகத் தோன்றியது. சற்று நேரத்துக்கெல்லாம் அதுவே சமுத்திர கோஷம்போல் தொனிக்கத் தொடங்கியது. முதலிலே தூரத்திலிருந்த சமுத்திரம் வரவர நெருங்கி வருவது போலவும் இருந்தது.

திடீரென்று சத்தம் பெரிதாகி, அருகில் நெருங்கி, ஒரு ஆயிரம் பேர் தட தட வென்று ஓடி வருவது போன்ற சத்தமாக மாறிற்று.

ஆயனரும் சிவகாமியும் உள்ளேயிருந்து வாசற் பக்கம் ஓடி வந்து பார்த்தார்கள். சற்றுத் தூரத்தில் மரங்களின் இடுக்கு வழியாகச் சிதம்பரம் சாலை தெரிந்தது. அதிலே அநேகம் பேர் தலைகால் தெரியாமல், ஒரே குழப்பமாக ஓடிக் கொண்டிருந்த காட்சி புலப்பட்டது.

அந்தக் கூட்டத்தின் நடுவே அம்பாரி வைத்த ஒரு யானையும் அதி விரைவாக நடந்து சென்றது. அதைச் சூழ்ந்து ஏழெட்டுக் குதிரைகளும் சென்றன. குதிரைகள் மேல் ஆயுத பாணிகளான ஆட்கள் இருந்தார்கள். அதே கூட்டத்தில் ஒரு புறத்தில் உயரமான கொடி மரம் ஒன்றைத் தூக்கிக் கொண்டு ஓடிய சிலர் காணப்பட்டார்கள். அந்தக் கொடி தாறுமாறாய்க் கிழிந்திருந்தது.

அதற்குப் பிறகு அன்றிரவெல்லாம் பத்துப் பேராகவும், ஐம்பது, நூறு பேராகவும், அதற்கு மேற்பட்ட கூட்டமாகவும் அடிக்கடி சாலையில் மனிதர்கள் தடதட வென்று ஓடிய சத்தம் கேட்டுக் கொண்டே யிருந்தது.

சிலசமயம் அசோக ஸ்தம்பத்தைச் சுற்றிக் கொண்டு புத்த விஹாரம் இருந்த பாழுந் தெருவழியாகவும் சிலர் ஓட்டமும் நடையுமாகச் சென்றார்கள்.

இதை யெல்லாம் பற்றிச் சிவகாமி ஆயனரைக் கேட்க, அவர், "எங்கேயோ யுத்தம் நடந்திருக்கிறது. அம்மா! யுத்தத்தில் ஒரு கட்சி தோற்று விட்டதாகத் தெரிகிறது. தோற்றவர்கள் தான் இப்படி நிலைகுலைந்து ஓடுவார்கள்!" என்றார்.

"அப்பா! தோற்றவர்கள் பகைவர்களாகத்தான் இருக்கவேண்டும். ஓடுகிறவர்களைப் பார்த்தால், பல்லவ வீரர்களாகத் தோன்றவில்லை யல்லவா?" என்றாள் சிவகாமி.

"நாம் என்னத்தை அம்மா கண்டோம்? இருட்டிலே என்ன தெரிகிறது? மாமல்லர் படைத் தலைமை வகித்த கட்சி ஜயித்திருக்க வேண்டுமென்றுதான் நானும் கருதுகிறேன்" என்றார் ஆயனர்.

இவ்வளவு தடபுடலும் இரவு முடிந்து பொழுது விடிவதற்குள்ளாக

நின்று விட்டது. சூரியோதயத்துக்குப் பிறகு சத்தம், சந்தடி, ஓட்டம் ஒன்றுமில்லாமலிருந்தது.

சிவகாமி புத்த விஹாரத்தின் வாசலில் நின்று சாலையை நோக்கிய வண்ணம் இருந்தாள். யாராவது அந்தப் பக்கம் வர மாட்டார்களா?— வந்தால் நேற்று இரவு நிகழ்ச்சிகளைப் பற்றி அவர்களிடம் விசாரிக்கலாமே என்று எண்ணமிட்டுக் கொண்டு அவள் காத்திருந்தாள்.

சூரியன் உதயமாகி ஒரு ஜாமம் இருக்கும். காலையிலிருந்து குடி கொண்டிருந்த நிச்சப்தம் சட்டென்று கலைந்தது.

சாலையோடு குதிரைகள் பாய்ந்து வரும் சத்தம் கேட்டது.

அடுத்தாற் போல் குதிரைகளும் காணப்பட்டன. அப்பப்பா! எவ்வளவு குதிரைகள்? பத்து, ஐம்பது, —நூறு, — ஆயிரம்கூட இருக்கும் போலிருக்கிறதே? அவ்வளவு குதிரைகள் மீதும் வேலும், வாளும் பிடித்த வீரர்கள் என்ன கம்பீரமாக அமர்ந்திருக்கிறார்கள்? அந்தக் குதிரைப் படையின் மத்தியில் ஒரு கம்பீரமான கருநிறக் குதிரையின் மேல் ஒரு வீரன் ரிஷபக் கொடியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும், சிவகாமியின் உள்ளமும் தோள்களும் பூரித்தன. அவள் நினைத்தபடியே பகைவர்கள்தான் தோற்று ஓடுகிறார்கள் என்றும், பல்லவ சைன்யந்தான் தொடர்ந்து செல்கிறதென்றும் தீர்மானித்துக் கொண்டாள்.

அந்தப் பெரிய குதிரைப்படை சாலையோடு போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம் இரண்டு தனிக் குதிரைகளும், அவற்றின் பின்னால் ஒரு ரதமும் விரைந்து வருவது காணப்பட்டது. இதென்ன விந்தை? அந்த இரு குதிரைகளும் ரதமும் சாலையிலிருந்து குறுக்கே திரும்பி அசோக ஸ்தம்பத்தையும் சிவகாமி இருந்த புத்த விஹாரத்தையும் நோக்கி வருகின்றனவே? குறுக்கு வழியாக அந்தத் தெருவில் புகுந்து சென்று சாலை ஏறி முன்னால் போன குதிரைப் படையைப் பிடிப்பதற்காக இவர்கள் இப்படி வருகிறார்கள் போலிருக்கிறது!

ஆனால், இதென்ன? இந்த முதல் குதிரைமேல் வருகிறது யார்? — சிவகாமியின் இருதயம் அப்படியே நின்று விடும்போலிருந்தது!

ஆம்; அதன்மேல் வந்தவர் மாமல்ல நரசிம்மர்தான்!

விஹாரத்தின் வாசலில் நின்ற சிவகாமி திடீரென்று மாமல்லரைக் குதிரை மீது பார்த்ததும், எங்கிருந்தோ, எதனாலோ, அவளுடைய கண்களில் கண்ணீர் வந்து நிறைந்து விட்டது. சொல்ல முடியாத உணர்ச்சி மிகுதியினாலும், காரணந் தெரியாத நாணத்தினாலும், சிவகாமி சட்டென்று திரும்பி, உள்ளே போவதற்குக் காலை எடுத்து வைத்தாள்.

அதே சமயத்தில் "ஆ!" என்ற குரல் ஒலியும், வேகமாக வந்த குதிரையைத் திடீரென்று இழுத்துப் பிடித்து அது தட் தட் என்று கால்களைத் தட்டிக்கொண்டு நிற்கும் சத்தமும் கேட்டன.

சிவகாமி வீதிப் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

மாமல்லருடைய கண்கள் தீவிரமான நோக்குடன் அவளுடைய நெஞ்சையே ஊடுருவுவதுபோல் பார்த்தன. அந்தப் பார்வையில் சொல்ல முடியாத வியப்பும், மகிழ்ச்சியும், அளவிடக் கூடாத அன்பும் ஆத்திரமும் கலந்திருந்தன.

இதெல்லாம் ஒரே ஒரு கணந்தான்; மறு கணத்தில் குதிரை மீண்டும் காற்றாய்ப் பறந்து சென்றது.

மாமல்லருக்குப் பின்னால் வந்த தளபதி பரஞ்சோதியும் சிவகாமியைப் பார்த்தபோதிலும் அவருடைய குதிரை ஒரு கணமும் நிற்காமல் மேலே சென்றது.

அவர்களுக்குப் பின்னால் வந்த ரதத்தைக் கண்ணபிரான்தான் ஓட்டி வருகிறான் என்று தெரிந்ததும், சிவகாமி மீண்டும் வாசற் புறத்துத் தூணண்டை வந்து நின்று, ரதத்தை நிறுத்தும்படி கையினால் சமிக்ஞையும் செய்தாள்!

அதைப் பார்த்துவிட்டுக் கண்ணபிரான் குதிரைகளை இழுத்துப்பிடித்து ரதத்தை நிறுத்தினான். குதிரைகள் திடீரென்று நின்றபடியால், அச்சு முறிவது போன்ற சடசட சத்தத்துடன் ரதம் தடக் என்று நின்றது.

குதிரை உன்னுடையதல்லவே? நீயும் திருடிக்கொண்டு வந்ததுதானே?" என்று சமாதானம் சொல்லிப் பார்த்தார்.

"இல்லை, குருவே! இல்லை! நான் இந்தப் புத்த பிக்ஷு மாதிரி இராத்திரியில் வாசலில் கட்டியிருந்த குதிரையைத் திருடிக்கொண்டு வந்தேனா? இல்லையே! அப்படித்தான் நாகநந்தி குதிரையைத் திருடிக் கொண்டு போனாரே? என்மேல் என்னத்திற்காகப் பாம்பைப் போடவேண்டும்?" என்று அலறினான்.

"அது என்ன சமாசாரம்?" என்று ஆயனர் கேட்டதற்கு, குண்டோதரன் கூறிய விவரமாவது: புத்த பிக்ஷு இரகசியமாய் எழுந்து வந்து வாசலில் கட்டியிருந்த குதிரையை அவிழ்த்து அதன் மேல் ஏறிக் கொண்டார். அதே சமயத்தில் தற்செயலாய்க் கண்விழித்த குண்டோதரன் ஓடிப் போய்க் குதிரையைப் பிடித்தான். பிக்ஷு தம் கையிலிருந்து ஒரு பையை அவிழ்த்து அதற்குள்ளிருந்து எதையோ எடுத்து அவன் மேல் வீசினார். அது ஒரு நாகப் பாம்பு என்று கண்டதும், குண்டோதரன் அலறிக்கொண்டு அப்பால் ஓட, குதிரையை விட்டுக்கொண்டு பிக்ஷு போய் விட்டார்!

குண்டோதரனுடைய வார்த்தையில் ஆயனருக்கும் சிவகாமிக்கும் நம்



பெரியவாள் கதை:

ஞான தீரன்

சுவாமி சுத்தானந்த பாரதி

சாந்தானந்தரின் உபதேசங்கள் ராஜமையருக்கு அமுதபானிய விருந்து; அவற்றை யெல்லாந் திரட்டி அழகான நடையில் வெளியிட அன்பர் அவரை வேண்டினர். அதே சமயம் விவேகானந்தர் வேதாந்த திக்விஜயம் செய்து, சென்னைக்கு வந்தார். இங்கே தமிழர் அவரைக் குதூகலமாக வரவேற்றனர். விவேகானந்தர் "எங்கே ராஜம்?" என்றார். "இதோ" என்று ராஜமையர் சுவாமிகளை வணங்கி நின்றார்; விவேகானந்தர் ஐயருடன் தனியே பேசினார். ஐயர் ஆங்கில இதழ் நடத்தி அதில் வேதாந்த உண்மைகளை வெளியிடும் கருத்தைத் தெரிவித்தார். "அதுவே உமது பணி; பிரபுத்த பாரதம் (விழித்த இந்தியா) என்ற பெயருடன் பத்திரிகை நடத்தும்; எளிய நடை, இனிய சொல்லோட்டம், தெளிந்த பொருள், ஆழ்ந்த கருத்து, அனுபவ உதாரணங்கள், கதைப் போக்கு — இவையே இக்காலப் பத்திரிகைகளுக்கு வெற்றி தரும். தங்கள் எழுத்தில் இந்த லட்சணங்கள் மிகுதி; ஆதலால் நாட்டும் பேறுவை! அத்வைத வேதாந்தத்தை எல்லாச் சமயங்களுக்கும் சமரஸ நிலையமாக்கும்" என்று சொல்லிச் சுவாமிகள் ஆசீர்வதித்தார்.

இராஜமையர் உடனே உத்யோகத்தை விட்டார்; சாந்தானந்தர் திருவடியில் அமர்ந்தார்; கீதை, பிரம்ம சூத்திரம், உபநிஷத் மூன்றையும் பாடம் கேட்டார். சுவாமிகளின் பிரசங்கங்களைக் குறிப்பெடுத்தார். அழகான ஆங்கிலத்தில் திட்ப நுட்பமாக எழுதினார். மஹாத்மாக்களின் வாக்குகளையும் வரலாறுகளையும் வசீகரமாக எழுதினார். வேதாந்தக் கதைகளும் புனைந்தார். பல புனை பெயர்களில் பிரபுத்த பாரதத்தின் பக்கங்களை நிரப்பினார். அந்த நடையழகும் பொருளழகும் அருளழகும் படிப்போரை வசீகரித்தன. முதல் மாதமே பத்திரிகைக்கு 1500 சந்தாதாரர்கள்; மறுமாதம் 4500; ஒரே மாதத்தில் பிரபுத்த பாரதம் ராஜமையர் பெயர் நாடெங்கும் பரவி விட்டது.

ஆவல் விடும் உடலும் அவரைச் சோதித்தன. ராஜமையரின் வேதாந்தம் தகப்பனாருக்கு ஒரு பைத்தியமாகத் தோன்றியது; குடும்பத்தில் மனவேறுபாடும் கலகமும் வலுத்தன; ராஜமையர் தமது மனைவியைத் திருப்தி செய்யவே பற்றுதலா யிருப்பது போல நடித்து வந்தார்; அவர் சித்தமெல்லாம் சிவமயம். கதவை மூடிக்கொண்டு நடராஜ உருவின் முன் நிஷ்டையில் ஆழ்ந்துவிட்டால், உலகமே இல்லைதான்! இரவில் தூக்கமில்லை; பேனா ஓடிக்கொண்டே இருக்கும். உடம்பில் பலமில்லை. நீரால் உடம்பு ஊதிப்போனது; கண் அவிந்தது; உயிர் ஊசலாடியது. குரு சாந்தானந்தரும் பிரபுக்களும் வந்து பார்த்து விசனித்தனர். ராஜமையர் புன்னகை பூத்தார். "குருவே, ஊனக்கண் போயிற்று; ஞானக் கண் திறந்தது; புறக் காதும் போய் விட்டால் அப சத்தங்களைக் கேளாமல் உள்ளே சுப சத்தம் கேட்பேன். குருவே, ஆத்மப் பறவை சந்தோஷமாகக் கூட்டை விட்டுப் பறந்து செல்கிறது. ஓம் தத்ஸத்" என்றார் ஞானதீரர்.

அவர் அமைதியாக இறந்த காட்சி ஓர் அற்புதம். (18-5-1898) இரண்டு நாள் கழித்து பிரபுத்த பாரதத்தில் வெளியான "வேதாந்தம் — ராஜாதி ராஜன்"— என்னும் கட்டுரைக்காக அவர்மீது ராஜத்துரோகக் குற்றம் சாட்டினார்கள். அரசாங்கம் பிடிவாரண்டு அனுப்பியது. போலீஸார் வந்தனர்.

"எங்கே ராஜமையர்?"

"சிவலோகத்தி லிருக்கிறார்!"

"அவருக்கு வாரண்டு இருக்கிறது."

"அனுப்பும் எமலோகத்துக்கு! எமராஜன் முத்திரை வைத்து சிவலோகத்திற்கு அனுப்புவான்."

தேகம் படுந்தாலுஞ்
சித்தந் தெளிந்தாகி
தேகநான் என்றே
நினைந்திடுவான் — யோகியாம்
தீரன்சாந் தானந்த
சீடன் பிரபுத்த
பாரத ராஜத்தைப் பார்!



★

காரைக்குடி J. P. பாஸ்கரஸாமி நாயுடு அவர்கள் குமாரர், பாஸ்கரன் பிரஸ் புரொப்ரைட்டர் ஸ்ரீ B. ராஜகோபால் நாயுடுவுக்கும், திருச்சிறுப்பள்ளி ஸ்ரீமான் E. சுந்தரராஜுலு நாயுடு அவர்கள் குமாரி சௌபாக்கியவதி சுபத்ரா தேவிக்கும் ஆகஸ்டு மீ 31-ம் தேதி யன்று திண்டுக்கல்லில் விமரிசையாகத் திருமணம் நடந்தது.

★



அஜந்தா மார்க்கம்

ராகி.

1. பயங்கரக் கடிதம்

பத்திரிகைத் தொழிலிலும் பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டவர்களுக்கு அநாமதேய மொட்டைக் கடிதம் வருவது சர்வ சாதாரணம். எனக்கும் சில சமயம் பயங்கரமான அநாமதேயக் கடிதங்கள் வந்திருக்கின்றன. இதற்கு மாறாக, சென்ற 1942-ம் வருஷக் கடைசியில், கையெழுத்துப் போட்ட பயங்கரக் கடிதம் ஒன்று எனக்கு வந்தது! படிக்கும்போதே மயிர்க்கூச்செறியும்படியான அந்தக் கடிதம் வருமாறு :—

ஓ கல்கியாரே!

நாளை அமாவாசையன்று நாம் உமது வீட்டுக்கு விஜயம் செய்து உம்மை ரண பத்ரகாளிக்குப் பலி கொடுக்கப் போகிறோம். நீர் ஊரை விட்டு ஓட எண்ணினாலும் விடமாட்டோம். எங்கே போனாலும் தொடர்ந்து வந்து பலி கொடுப்போம். நீர் ஓடுவதற்கு வீண் முயற்சி செய்ய வேண்டாம். இங்ஙனம்,

மகா காலபைரவர்.

இதைப் படித்ததும் எனக்கு எப்படி யிருந்திருக்குமென்று நேயர்களே ஊகித்துக் கொள்ளலாம். அடுத்த அமாவாசை எப்போது வரப் போகிறதென்று ஒரே ஆவலாகப் போய்விட்டது! ஊரை விட்டு ஓடப் பார்க்கும் வீண் பிரயத்தனம் நான் செய்யவில்லை. அமாவாசைக்கு நாலு நாளைக்கு முன்பு வெளியூருக்குப் போக வேண்டியிருந்த காரியத்தைக்கூட ரத்து செய்து விட்டேன்.

பிரத்தியாருக்கு வரும் கடிதங்களைப் பார்க்கக் கூடாதென்று மூன்றாம் வகுப்பிலேயே போதிக்கப் பட்டிருந்தும், (ஒரு வேளை பள்ளிக்கூடத்தில் போதிக்கப்பட்ட காரணத்தினாலேயோ, என்னமோ,) பலர் அதற்கு விரோதமாக நடக்கிறார்கள். மேஜை மேல் வைத்திருந்த மேற்படி கடிதத்தை நண்பர் ஒருவர் பார்த்து அந்தரங்கமாக இன்னும் நாலைந்து பேருக்கு மட்டும் சொல்லி வைத்தார். அமாவாசையன்று அவர்கள் எல்லாரும் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். அப்பால் இப்பால் நகராமல் இராத்திரி பன்னிரெண்டு மணி (பழைய மணி) வரையில் இருந்து பார்த்தார்கள். மேலும் இருப்பதற்கு நியாயம் ஒன்றும் இல்லாமல் மனமின்றி விடை பெற்றுக் கொண்டு கிளம்பினார்கள். போகும்போது அவர்களுடைய முகத்தில் காணப்பட்ட ஏமாற்றத்துக்கு அளவில்லை.

ஆனால், அவர்கள் போய்விட்ட பிறகு நடந்ததை நினைத்தால், அவர்கள் போனதே நல்லதாய்ப் போய்விட்டது என்று சொல்ல வேண்டும்! ஆஹா! அன்றிரவை நினைத்தாலே எனக்கு ரோமாஞ்சலி உண்டாகிறது. உடம்பின் ஒவ்வொரு அணுவும் பயங்கரத்தினால் சிலிர்க்கிறது.

ஆம்; அன்று நடு ஜாமத்துக்குப் பிறகு, காத்திருந்த நண்பர்கள் எல்லாம் போய்விட்ட பிறகு, மகா கபால பைரவர் வரத்தான் செய்தார்! ஆனால், கடிதத்திலே கண்டபடி நடப்பதற்கு நான் இடங்கொடுக்கவில்லை. அதற்கு நேர்மாறாகக் காரியத்தை நடத்தி விட்டேன்!

அதாவது, மகா கபால பைரவர் என்னைப் பலி கொடுக்கவில்லை.

அவரை நான் பத்திர காளிக்குப் பலி கொடுத்து விட்டேன்!

அந்தக் காரியத்தில் என்னுடைய கையை நான் கறைப்படுத்திக் கொள்ளவில்லை!

அவருடைய சேடன் சித்திரக் குள்ளனைக் கொண்டு அவரை வாளினால் தீர்த்து விடப் பண்ணினேன்!

அதாவது, "பார்த்திபன் கனவு" என்ற கதையில், மகா கபால பைரவரைச் சித்திரக் குள்ளன் வெட்டிக் கொல்லும் அத்தியாயத்தை எழுதி முடித்தேன்.

ஆனால், அன்றைய இரவின் பயங்கரங்கள் அத்துடன் முடிந்து விடவில்லை.

மேற்படி அத்தியாயத்தை எழுதி முடித்த பிறகு படுத்துத் தூங்கப் பிரயத்தனப் பட்டேன். வெகு நேரம் வரை தூக்கம் வரவில்லை. கடைசியில் கொஞ்சம் ஏதோ கண்ணிமைகள் கனத்து மூடுவது போலிருந்தது. பாதி விழிப்பும் பாதித் தூக்கமுமா யிருந்த அந்த நிலையில், மகா கபால பைரவரின் கோரமான ஆவி உருவம் வந்து என் முன்னால் நின்றது.

என் உடம்பும், உடம்புக்குள்ளே இரத்தமும், எலும்பும், — எலும்பின் உள்ளேயும் கூட — சிலு சிலுத்தது.

அப்போது, அந்த ஆவி உருவக் கபால பைரவரின் முகத்தில் புன்னகை உண்டானதைக் கண்டு கொஞ்சம் தைரியம் உண்டாயிற்று.

பைரவர் தமது ஒற்றைக் கையினால் என்னை எழுந்து வரும்படியாகச் சமிக்ஞை செய்தார்.

என்னால் மீற முடியாத ஏதோ ஒரு சக்தியினால் கவரப்பட்டவனாய்ப் படுக்கையிலிருந்து எழுந்தேன்.

ஆவி உருவம் முன்னால் செல்ல, நான் பின்னால் சென்றேன். விரைவாக, இன்னும் விரைவாக, மேலும் விரைவாக, மனோ வேகத்தையும் விட விரைவாக, வான வெளியில் வட திசை நோக்கி நாங்கள் யாத்திரை செய்தோம். இவ்விதம் நாங்கள் யாத்திரை செய்த நேரம் ஒரு கணமாகவும் தோன்றியது; அதுவே ஒரு யுகமாகவும் தோன்றியது: முடிவில் ஆகாயத்திலிருந்து கீழே பூமியில் இறங்கினோம்.

நாங்கள் இறங்கிய இடம் மலைப்பிரதேசம். எதிரே அடுக்கடுக்காக மலைத் தொடர்கள் தெரிந்தன.

அவ்விடத்தில் இறங்கியவுடனே கபால பைரவர் தன்னுடைய ஒற்றைக் கையினால் தரையிலே சுட்டிக் காட்டினார். அவர் காட்டிய இடத்தை உற்றுப் பார்த்தேன்.

ஆஹா! என்ன கோரம்! என்ன பயங்கரம்! ஒரு தனித்த கை, தோளினருகில் துண்டிக்கப் பட்ட ஒரு கை, அங்கே கிடந்தது!

பைரவரின் முகத்தில் புன்னகை இன்னும் விசாலமாக மலர்ந்தது. அவர் குனிந்தார். என்ன செய்யப் போகிறார் என்று நான் சொல்ல முடியாத வியப்புடனும் அருவருப்புடனும் பார்த்துக் கொண்டிருந்தேன். பைரவர் குனிந்த உடனே, கீழே கிடந்த கை நிமிர்ந்து எழுந்து அவர் தோளிலே ஒட்டிக் கொண்டது.

ஒற்றைக் கையுடனே தரையில் குனிந்த கபால பைரவர் இரண்டு நீண்ட கரங்களுடன் எழுந்து நின்றார்!

அடி வயிற்றிலிருந்து வருவது போன்ற அவருடைய ஆழ்ந்த குரலில் "வந்தனம்; என்னைப் பலி கொடுத்ததற்காக ரொம்ப வந்தனம்" என்றார்.

நான் திகைத்து நின்றேன்.

"போய் வருகிறேன்; மறுபடியும் வந்தனம்!" என்றார்.

"எங்கே போகிறீர்கள்! இது என்ன இடம்?" என்று கேட்டேன்.

"இதுதான் அஜந்தா மலை; மலைக்குள்ளே இருக்கும் குகை மண்டபங்களுக்குப் போகிறேன். என்னைக் கொன்றதற்காக மறுபடியும் வந்தனம்" என்றார்.

அஜந்தா என்றதும், எனக்குச் சொல்ல முடியாத ஆவல் உண்டாயிற்று. "நானும் உள்ளே வரலாமா?" என்றேன்.

"என்னுடைய பூர்வ சரித்திரத்தையும் எழுதுகிறாயா?" என்றார் பைரவர்.


"கட்டாயம் எழுதுகிறேன்" என்றேன்.

பின் தொடரும்படி கையினால் சமிக்ஞை செய்துவிட்டு, கபால பைரவர் மலைக் கணவாய்க்குள்ளே புகுந்தார்.

அரைத் தூக்கத்திலிருந்து ஆழ்ந்த நித்திரைக்குள் நானும் புகுந்தேன்.

* * *

அன்று முதல், அஜந்தாவுக்குப் போக வேண்டுமென்ற ஆசை என் உள்ளத்தில் பெருகிக் கொண்டிருந்தது.



"சிவகாமியின் சபதம்" எழுத ஆரம்பித்ததிலிருந்து அந்த ஆசை இன்னும் அதிகமாயிற்று. கதை முடிவதற்குள்ளே கட்டாயம் அஜந்தா போய் வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இல்லாவிட்டால், கபால பைரவருக்கு நான் அளித்த வாக்கை எப்படி நிறைவேற்ற முடியும்?

2. அழியாச் சித்திரம்

பத்து வருஷத்துக்கு முன்னால் நானும் சில நண்பர்களும் மாமல்லபுரம் போயிருந்தோம். அந்தக் கனவு உலகத்தில் இரண்டு தினங்கள் தங்கியிருந்தோம். குன்றுகளைக் குடைந்து கோயில்களாகச் செய்திருந்த அதிசயத்தைக் கண்டோம். பாறைச் சுவர்களையெல்லாம் அற்புத உயிர்ச் சிற்பங்களினால் அலங்கரித்திருந்த விந்தையைக் கண்டோம். அங்கேதான் முதன் முதலில் எனக்கு இராஜ வம்சத்துச் சிநேகிதம் ஏற்பட்டது. ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கனவு லோகத்தைச் சிருஷ்டித்த பல்லவ சக்கரவர்த்திகளான மகேந்திர வர்மனும் நரசிம்ம வர்மனும் எனக்கு அத்தியந்த சிநேகிதர்களாகி விட்டார்கள்!

மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் போல் இன்னும் எங்கேயாவது உண்டா என்று விசாரிக்கத் தொடங்கிய போது, ஏறக்குறைய அதே காலத்தில் விந்திய மலையிலிருந்து இலங்கை வரைக்கும் சிற்ப சித்திரக் கலைகள் மகோந்நத மடைந்திருந்தன என்று தெரிய வந்தது. அத்தகைய பூர்வீக பாரத நாட்டின் கலை விந்தைகளுக்குள்ளே, அஜந்தா குகை மண்டபங்கள்தான் தலைசிறந்தவையென்றும், அவை போன்ற அதிசயம் உலகத்திலேயே வேறெங்கும் கிடையாதென்றும் கலை நிபுணர்கள் பலருடைய அபிப்பிராயத்தைப் படித்தேன். இது உண்மையாய்த்தான் இருக்க வேண்டுமென்று இலங்கைப் பிரயாணத்தின்போது எனக்கு நிச்சயமாயிற்று.

இலங்கையில் ஸ்ரீ கிரி ('சிக்ரி') மலையின் செங்குத்தான பாறை முகப்பில் சுமார் நூறு அடி உயரமுள்ள இரும்பு ஏணி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய நேர் செங்குத்தாக நிற்கும் அந்த ஏணியில் ஏறும்போதே தலை மயக்கம் உண்டாகி விடுகிறது. ஏணியின் உச்சியை அடைந்து அங்குள்ள குகையில் கால் வைத்ததும், "ஐயோ! இதென்ன? அரண்மனை அந்தப்புரத்துக்குள்ளே வந்து விட்டோமே?" என்ற பீதி உண்டாகிறது. சௌந்தரியமே உருக்கொண்ட இராஜ குமாரி ஒருத்தியும், அவள் பின்னால் தட்டில் பூஜை சாமான்கள் ஏந்திய

செடிகளும் அங்கே காணப்படுகின்றனர். கொஞ்சம் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்க்கும்போதுதான் அவர்கள் உண்மையான மோகினிப் பெண்கள் அல்ல, — சுவரில் எழுதிய சித்திரங்கள் என்று தெரிய வருகின்றன. இந்தச் சித்திரங்கள் எல்லாம் அஜந்தா ரகத்தைச் சேர்ந்தவை என்றும் இதைப்போல் எத்தனையோ ஆயிரம் சித்திரங்கள் அஜந்தா குகை மண்டபச் சுவர்களிலே விளங்குகின்றன என்றும் அறிந்தேன்.

3. மன்மாத் ஜங்ஷன்

அது, இது, எல்லாமாகச் சேர்ந்து அஜந்தா அதிசயங்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் என் மனதில் அளவில்லாமல் பொங்கிக்கொண்டிருந்தது.

எனவே, இந்த வருஷம் ஏப்ரல் மாதத்தில் எனது நண்பர்கள் மீரா யாத்திரை கிளம்பிய சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொண்டு நானும் அஜந்தாப் பிரயாணம் கிளம்பினேன்.

அஜந்தாவைப் பற்றிய யாத்திரைப் புத்தகங்களைப் படித்தால், அஜந்தா நைஜாம் இராஜ்யத்தில் இருக்கிறதென்றும் அவுரங்காபாத் ஸ்டேஷனில் இறங்கி மோட்டாரில் போக வேண்டுமென்றும் எழுதியிருப்பதைக் காணலாம். நைஜாம் ராஜ்யத்தில் அவுரங்காபாத் என்றதும், நமக்கு எப்படியோ ஹைதராபாத் ஞாபகம் வந்து, அதற்கு அக்கம் பக்கத்தில் அஜந்தா எங்கேயோ இருப்பதாக எதிர்பார்க்கத் தோன்றும். உண்மையில் அவுரங்காபாத என்னும் ஊர், ஹைதராபாத் அல்லது செகந்தராபாத்தைக் காட்டிலும் பம்பாய்க்குத்தான் அருகில் இருக்கிறது. பம்பாய் வழியாக அங்கே போவதுதான் சௌகரியமானது. பம்பாயிலிருந்து நாகபுரி போகும் ரயிலில் எதிர் சென்று மன்மாத் ஜங்ஷனில் வண்டி மாற்ற வேண்டும். "மன்மாத்தில் வண்டி மாற்ற வேண்டும்" என்று சொல்வது என்னவோ சுலபந்தான்; ஆனால் அதைக் காரியத்தில் நடத்துவது அப்படியல்ல. இரவெல்லாம் கண் விழித்திருக்கவும், பன்னிரண்டு மணி ரயிலுக்காகக் காலை நாலு மணி வரையில் காத்திருக்கவும், ஒரு லட்சம் மூட்டைப் பூச்சிகளால் கடிக்கப்படவும், ஸ்டேஷன் மாஸ்டர், டிரைவர், கார்டு, போர்ட்டர்கள் எல்லாருடனும் யுத்தம் செய்யவும், சகோதரப் பிரயாணிகளுடன் குஸ்தி போடவும் தயாராயிருப்பவர்கள்தான் இந்த நாளில் மன்மாத் ஜங்ஷனில் ரயில் இறங்கி ஏற முடியும். என்னுடன் வந்த கோஷ்டியில் அநேகருக்கு மன்மாத்திலேயே அஜந்தாவைப் பார்க்கும் ஆசை பாதிக்கு மேல் குறைந்து போய் விட்டது.

"அஜந்தாவில் அப்படி ஒன்றும் பிரமாத அதிசயம் இல்லையாமே?" என்றார் ஒருவர்.

"சித்திரம் எழுதியிருக்கும் குகைகளிலே ஒரே குப்பிருட்டாயிருக்குமாம். ஒன்றுமே கண்ணுக்குத் தெரியாதாம்!" என்றார் இன்னொருவர்.

"அஜந்தா பார்க்கவேணுமென்றால், அதற்கு இப்படியெல்லாம் கன்னு பின்னுவென்று வரக்கூடாது. அதற்கு வரவேண்டிய விதமே வேறே!" என்றார் ஒருவர்.

"எனக்கு டைபாய்டு சுரம் வரும்போலிருக்கிறது! அவுரங்காபாத்தில் வந்து செத்துப் போனால், மந்திரம் செய்வதற்



குப் புரோகிதர் கிடைப்பாரோ?" என்று ஒருவர் கவலைப்பட்டார்.

மன்மாத்திலிருந்து திரும்பிப் பம்பாய்க்குப் போக மறுநாள் மத்தியானத்துக்கு மேலே தான் வண்டி என்று தெரிந்த பிறகு, மன்மாத்தில் மூட்டைப் பூச்சி கடித்துச் சாவதைவிட அவுரங்காபாத்திலேயே புரோகிதர் இல்லாமல் சாகலாம் என்று தீர்மானித்து எப்படியோ ரயில் ஏறிவிட்டோம்!

4. அவுரங்காபாத்

அவுரங்காபாத்தில் நாங்கள் எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக எல்லாம் நடந்தது என்பதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது புரோகிதரைத் தேடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இதற்குக் காரணம் அந்த ஊரில் வசிக்கும் ஸ்ரீ கே. என். ராஜன் என்னும் ஆசாமிதான். இவர் மைசூரில் பிரசித்தி பெற்ற திவான்களில் ஒருவராயிருந்த ஸ்ரீ சேஷாத்ரி அய்யரின் புதல்வர். அவுரங்காபாத்தில் பெரிய ஆலை வைத்து நடத்துகிறார். இவருடைய வீட்டில் நாங்கள் — மீரா யாத்திரை கோஷ்டி உள்பட—தங்கினோம்.

ஸ்ரீ கே. என். ராஜன், வெளித் தோற்றத்தில் வெகுளியான 'பெரிய' மனிதராகத் தோன்றுகிறார். ஆனால் அவர் எங்களைப் படுத்தி வைத்த பாடு கொஞ்ச நஞ்சமல்ல. முதலில், வீட்டுக்குள் நுழைந்ததும், அவர், "உங்களுக்கு இங்கே ரொம்ப அசௌகரியமாய்த்தான் இருக்கும். பொறுத்துக் கொள்ள வேண்டியது. இந்த வீட்டில் யார் யாருக்கு எங்கே சௌகரியமோ அங்கே இருந்து கொள்ளலாம்" என்று சொன்னார். உடனே அவரவர்களும் படுக்கையை எடுத்துக்கொண்டு அங்கங்கே போய் இடம் பிடித்துக் கொண்டார்கள். பிறகு, ஒருவரையொருவர் பார்ப்பதே பிரம்மப் பிரயத்தனமாகி விட்டது. அவ்வளவு சின்ன வீடு! ஒரு மூலையிலிருந்து கூச்சல் போட்டால், இன்னொரு மூலையிலிருப்பவர்களுக்குக் கேட்காது.



இன்னும் அந்த மனுஷர் எங்களுக்குச் செய்த அசௌகரியங்களைச் சொல்லி முடியாது. அரிசிச் சாதம் வேண்டியவர்களுக்கு அரிசிச் சாதம்; கோதுமை ரொட்டி வேண்டியவர்களுக்கு கோதுமை ரொட்டி; பழமும் பாலும் வேண்டியவர்களுக்குப் பழமும் பாலும்; உபவாசம் விரும்பியவர்களுக்கு உபவாசம்; காரம் வேண்டியவர்களுக்குக் காரம்; காப்பி வேண்டியவர்களுக்குக் காப்பி; டீ, கோக்கோ, ஸோடா, உஷ்ணோதகம், சுத்த ஜலம், ஐஸ் வாட்டர் வேண்டியவர்களுக்கு அவரவர்கள் இஷ்டப்படி!

இவ்வளவுடன் நாங்கள் வந்த காரியத்துக்கான அசௌகரியங்களைச் செய்து கொடுக்கவும் அவர் பின்வாங்கவில்லை. அதாவது எல்லோராவுக்கு பஸ்; அஜந்தாவுக்கு டாக்ஸி; இரண்டு இடத்துக்கும் கட்டுச் சாதம்; அந்தந்த இடங்களைப் பற்றிய வர்ணனைகளும் விவரங்களும் சித்திரப் படங்களும் அடங்கிய புத்தகங்கள் முதலியன.

நான் யாத்திரையாகப் போகும் இடங்களில் எல்லாம் இம்மாதிரி அசௌகரியங்களைச் செய்து தரக்கூடிய ஒரு மனிதர் இருந்தால் போதுமென்று பகவானிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லோரா, அஜந்தா என்னும் இரண்டு இடங்களைப் பற்றிக் குறிப்பிட்டேனல்லவா? இரண்டும் பெயர் போன இடங்கள்தான். எல்லோராவிலே நமது புராதன சிற்பக் கலையின் மகோன்னதத்தைக் காணலாம். அஜந்தாவிலோ சிற்பத்துடன் சித்திரக் கலையும் மகோன்னதம் அடைந்திருக்கிறது. எல்லோரா, அவுரங்காபாத்திலிருந்து வட மேற்கே பதினாறு கல். அஜந்தா, அவுரங்காபாத்திலிருந்து ஏறக்குறைய நேர் வடக்கே சுமார் அறுபது மைல்.



5. அதோ எல்லோரா!

"அதோ எல்லோரா!" என்று பஸ் கண்டக்டர் சொன்னதும், அவன் காட்டிய திசையை நோக்கினோம். செங்குத்தான சுவர் மாதிரி ஒரு விசாலமான மலைப்பாறை நீள நெடுக நின்று கொண்டிருந்தது. அதில் அங்கங்கே பழைய காலத்துச் சாளர வாசல்கள் மாதிரி தென்பட்டன.

இந்தப் பாறைச் சுவரின் நீளம் வடக்கு தெற்காகச் சுமார் ஒன்றே கால் மைல் நீளம் என்று தெரிந்து கொண்டோம்.

சாளர வாசல்கள் மாதிரி தென்பட்டவை தான் மலையில் குடைந்த குகைக் கோயில்களின் வாசல்கள் என்று தெரிந்தது. அம்மாதிரி வாசல்கள் எத்தனை என்று எண்ணிப் பார்த்தோம். கணக்கு ஒன்றும் சரியாக வரவில்லை. எனவே, ஸ்ரீ ராஜன் கொடுத்த புத்தகத்தைப் பார்த்து மொத்தம் 33 குகைக் கோயில்கள் என்று தெரிந்து கொண்டோம். இவற்றில் தெற்கு மூலையிலிருந்து 12 குகைகள் புத்த மதக் குகைகள்; நடுவில் 17 ஹிந்து மதக் குகைகள்; வடக்கே 5 ஜைன மதக் குகைகள். மொத்தம் எவ்வளவு ஆகிறது? முப்பத்து நாலா? ஒன்று எப்படி அதிகம் ஆயிற்று! அடுத்த தடவை எல்லோராவுக்குப் போய்த் தான் தெரிந்து கொள்ள வேண்டும்!

பஸ் போய் நின்ற இடம், கிட்டத்தட்ட அந்தப் பாறையின் நடுமத்தியிலிருக்கும் கைலாஸநாதர் குகைக் கோயிலுக்கு எதிரே உள்ள மாத்தடி. அந்தக் கோயில் வாசலில் ஒரு ஆசாமி சாவகாசமாக உட்கார்ந்திருந்தான். எங்களைப் போல் யாத்திரை வருபவர்களின் பிராணனை வாங்குவதற்கென்று ஏற்பட்ட வழிகாட்டி அவன்தான் என்று தெரிந்துகொண்டு, அவனிடம் "குகைகளைப் பார்க்க வேண்டும்!" என்றோம். "என்ன அவசரம்? உட்கார்ந்து சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள்" என்றான் அந்த ஆசாமி. "எங்களுக்குக் கொஞ்சம் அவசரந்தான். குகைகளை எவ்வளவு நேரத்தில் பார்க்கலாம்?" என்றோம்.

அந்த ஆசாமி வாயிலிருந்த பீடியைச் சாவகாசமாகக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு, "மூன்று மாதத்திற்குள் முப்பத்து மூன்று குகைகளையும் பார்த்து முடித்து விடலாம்" என்றான்.

"எங்களுக்கு மூன்று மணி நேரந்தான் இருக்கிறது. அதற்குள் பார்த்தாக வேண்டும்" என்றோம்.

"அப்படியும் பார்க்கலாம். ஜகத்துக்கு ஒன்றாக ஹிந்து கோவில் ஒன்று, புத்தர் கோயில் ஒன்று, ஜைனர் கோயில் ஒன்று — ஆக மூன்று கோவில் பார்த்தால் எல்லாம் பார்த்தபடிதான்" என்று கூறி, அவை இன்னின்ன நம்பர் குகை என்று சொல்ல ஆரம்பித்தான்.

பார்க்க வேண்டிய ஹிந்து கோயில்களில் ஒன்று நின்ற இடத்தில் உள்ளதுதான் என்று தெரிந்துகொண்டு கோயிலுக்குள்ளே பிரவேசித்தோம். பிரவேசித்ததுதான் தாமதம்; அப்படியே அசந்து போய் உட்கார்ந்து விட்டோம். அப்பேர்ப்பட்ட அற்புதமான காட்சி எங்கள் எதிரில் தென்பட்டது.

அதை எழுத்தில் வர்ணிப்பது முடியாத காரியம். வர்ணித்தாலும் படிப்பவர்களின் மனக்கண் முன்னால் அந்தக் காட்சியைக் கொண்டு வருவது அசாத்தியம். ஏன்? இந்த இதழில் வெளியாகி யிருக்கும் புகைப் படங்களைக் கொண்டு கூட அந்த எல்லோரா கைலாஸ நாதர் கோயில் காட்சியை உருவகப் படுத்திக் கொள்ளுதல் அசாத்தியமான காரியந்தான்.

புகைப் படத்தில் அந்த ஸ்தம்பத்துக்கு அருகிலுள்ள யானையைப் பார்க்கும் போது என்ன தோன்றுகிறது? ஏதோ குழந்தைகள் விளையாடுவதற்குரிய பொம்மை யானை, — தும்பிக்கை ஒடிந்து போயிருக்கிறது என்று தோன்றுகிறதல்லவா? அதன் அருகில் போய்ப் பார்த்தால் உண்மை தெரியும்; — யானையின் ஒரு காலை நமது இரண்டு கைகளினாலும் தழுவிப் பிடிக்க முடியாதென்று!

அப்புறம் அந்த த்வஜஸ்தம்பத்தைத் தான் பாருங்கள்! ஏதோ ஒரு சுண்டு விரல் பருமனும் அவ்வளவு உயரமும் உள்ள பொம்மை ஸ்தம்பமாகத் தோன்றுகிறதல்லவா? அருகில் போய் நின்று அண்ணாந்து பார்த்துக் கழுத்து வலிக்கும் போதல்லவா உண்மை தெரியும்?

இந்த யானையும் த்வஜஸ்தம்பமும் உள்ள இடம் கோயிலின் வடக்குப் பிராகாரத்தின் ஆரம்பம். இந்தப் பிராகாரத்தின் நீளம் சுமார் 250 அடி. இம்மாதிரியே நாலு பக்கமும் விசாலமான பிராகாரங்கள் இருக்கின்றன. தெற்குப் பிராகாரத்தின் ஆரம்பத்திலும் ஒரு த்வஜஸ்தம்பமும் யானையும் நிற்கின்றன.

இதிலே யெல்லாம் அப்படி என்ன பிரமாத விசேஷம்? நம் ஊரில் கோயில்கள் இல்லையா? பிராகாரங்கள் இல்லையா?

நம் ஊர்க் கோயில்களில் இல்லாத ஒரு விசேஷம் இங்கே உண்டு.

எல்லோராக் கைலாஸக் கோயிலைக் கட்டியவர்கள் செங்கல் சூளை போடவில்லை; சுண்ணாம்பைத் தேடவில்லை; சேறு குழைக்கவில்லை; கருங் கல்லை வெட்டிப் பெயர்த்துக் கொண்டு வந்து ஒன்றின்மேல் ஒன்று வைத்து அடுக்கவும் இல்லை.

அல்லது, மற்ற குகைக் கோயில்களைப் போல், பாறைச் சுவரின் ஒரு பக்கத்திலிருந்து உள்புறம் குடைந்து கொண்டு போகவும் இல்லை.

பாறையின் உச்சியில்போய் உட்கார்ந்து கொண்டார்கள். அங்கிருந்து கீழே குடைந்து கொண்டுவர ஆரம்பித்தார்கள்!

எவ்வளவு ஆழம் குடைந்தார்கள் தெரியுமா? தரை மட்டம் வரையில் அதாவது சுமார் 100 அடி ஆழம் குடைந்தார்கள்!

எவ்வளவு நீள அகலம் குடைந்தார்கள் தெரியுமா? சுமார் இருநூற்றைம்பது அடி நீளமும் அறுபது அடி அகலமும் குடைந்தார்கள்.

இது கோயிலின் ஒரு பிராகாரம் ஆயிற்று. இதுமாதிரி நாலு பக்கத்துக்கும் நாலு பிராகாரம் குடைந்து எடுத்தார்கள்.

அப்படிக் குடைந்து எடுத்தபோது, பிராகாரச் சந்திகளில் ஒரு த்வஜ ஸ்தம்பத்துக்கும் ஒரு கல் யானைக்கும் பாறையைத் துண்டாக விட்டு விட்டுக் குடைந்தார்கள்.

இவ்விதம் விட்ட துண்டுப் பாறைகளை த்வஜஸ்தம்பமாகவும் யானையாகவும் அமைத்தார்கள்!

நாலு பிராகாரத்துக்கும் நடுவிலே விடப்பட்ட மலைப் பகுதியை அற்புத சிற்பங்களுடன் கூடிய கோயிலாக நிர்மாணித்தார்கள். அந்தக் கோயிலின் வெளிச் சுவரை முதுகிலே தாங்கி நிற்பது போன்ற பிரம்மாண்டமான யானை முகங்களையும், யாளி முகங்களையும், சிங்க முகங்களையும் அமைத்தார்கள். அவை கோயிலைத் தாங்கிக் கொண்டே ஒன்றுக் கொன்று சண்டையிடுவதையும் காட்டினார்கள்.

கோயிலின் மத்தியில் கர்ப்பக் கிருஹம் குடைந்து அமைத்தார்கள். மண்டபங்கள் பல குடைந்து அமைத்தார்கள். மண்டபத்தைத் தாங்குவதற்காக அல்லாமல், அழகுக்காக வென்றே பெரிய பெரிய தூண்களையும் அமைத்தார்கள்.

சாதாரணமான கோயில்களில் காண முடியாத மேல் மச்சு மண்டபங்களையும் அமைத்தார்கள்.

மேல் மச்சு மண்டபங்களிலிருந்து வாசல் மண்டபத்தின் மச்சுக்கும், பிராகார மண்டபங்களின் மச்சுக்கும் போவதற்கு மேற் பாலங்களை அமைத்தார்கள்!

இவ்வளவும் ஒரு துளி சுண்ணாம்புக்கு அவசியமின்றி மலையைக் குடைந்தே செய்தார்கள்!

அப்படி யென்றால் எவ்வளவு அபூர்வமான வேலை, எவ்வளவு சர்வ ஜாக்கிரதையாகச்

செய்திருக்க வேண்டிய வேலை, — என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

6. கல் பேசுகிறது!

அந்த துவஜஸ்தம்பத்தை அமைத்து வரும் போது, கல்லுளியை எவ்வளவு ஜாக்கிரதையாய் உபயோகப் படுத்தியிருக்க வேண்டும்? கொஞ்சம் அஜாக்கிரதையாக உபயோகப் படுத்திப் பாறையிலிருந்து ஒரு பின்னல் அதிகமாக எடுத்து விட்டால், துவஜஸ்தம்பத்தின் அமைப்பே கெட்டு விடுமல்லவா?

துவஜஸ்தம்பத்தின் விஷயம் இப்படியென்றால், அங்கேயுள்ள ஆயிரக்கணக்கான அற்புத சிற்ப வடிவங்களைப் பற்றி என்னவென்று சொல்வது?

ஆஹா! அந்தச் சிற்ப வடிவங்களிலே தான் என்ன கம்பீரம்? எவ்வளவு நுட்பமான முக பாவங்கள்! உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சிகள் எவ்வளவு தெளிவாக முகத்தில் பிரதிபலிக்கின்றன? அவையெல்லாம் வெறும் கல் வடிவங்களா? உயிர் இல்லாச் சிற்பங்களா? நம்மோடு நேருக்கு நேர் பேசுகின்றனவே? குலாவுகின்றனவே? முகமன் கூறி வரவேற்கின்றனவே? இவையெல்லாம் உயிரற்ற சிற்பங்களா?

இந்தச் சொப்பன உலகத்தைச் சிருஷ்டிக்க எவ்வளவு ஆயிரக் கணக்கான சிற்பிகள் வேலை செய்திருக்க வேண்டும்? எவ்வளவு நீடித்த காலம் அவர்கள் வேலை செய்திருக்க வேண்டும்? ஒரு தலை முறையிலே நடந்திருக்கக்கூடிய வேலையா இது? பல தலை முறைகளில் நீடித்து நடந்திருக்க வேண்டிய வேலையாக அல்லவா தோன்றுகிறது? இவ்வளவு நீண்ட காலத்தில் — குறைந்தபட்சம், நூறு வருஷகாலத்தில் — வேலை செய்த வெவ்வேறு சிற்பிகளில் ஒருவராவது ஒரு பிழையாவது செய்யாமல் அல்லவா தங்கள் வேலையைச் செய்திருக்கிறார்கள்!

ஆம்; ஒருவராவது ஒரு பிழையும் இல்லாமல்தான் வேலை செய்திருக்க வேண்டும். இல்லாவிடில் அந்த அற்புத மலைக் கோயில் திருப்பணி முழுதுமே வியர்த்தமாய்ப் போயிருக்கும்.

சித்திரத்தில் ஒரு பிசகு நேர்ந்து விட்டால் அதை அழித்து விட்டு வேறு எழுதி விடலாம்.

தனிக் கல்லில் சிற்ப வடிவம் செய்யும் போது பிசகு நேர்ந்து விட்டால், அதைத் தள்ளிவிட்டு வேறு கல்லை எடுத்துக் கொண்டு செய்துவிடலாம்.

ஆனால் மலையில் குடைந்து அமைக்கும் குகைக் கோயிலில் செய்யும் சிற்ப வடிவம் அத்தகையதன்று. பிசகு நேர்ந்தால் நேர்ந்தது தான். அதைத் திருத்த முடியாது. ஒன்றில் தவறு நேர்ந்தால், எல்லாமே கெட்டுப் போய்விடும்.

அப்படி ஒரு பிழையின்றி, ஒரு தவறுதல் இன்றி, மகா சிற்பிகளால் அமைக்கப்பட்ட சிற்ப வடிவங்கள் எல்லோரா கைலாஸநாதர் கோயிலில் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன!

ஆலயச் சுவர்களின் வெளிப்புறம், உட்புறம் எல்லாம் சிற்ப வடிவங்கள்; பிராகாரங்களின் பின் சுவர்களில் எல்லாம் வரிசையாகச் சிற்பங்கள்; மேலே அண்ணாந்து பார்த்தால் சிற்பங்கள்; திரும்பிப் பின்னால் பார்த்தால் சிற்பங்கள். பெரிய பிரம்மாண்டமான வடிவங்கள்; மிகச் சிறு நுட்பமான வேலைப்பாடுகள்.

சிற்ப வடிவங்களில் விளக்கும் பாவத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். பாவம் என்றால் ஒரு வகையானதல்ல, நிற்கிற நிலையிலே பாவம்; உடம்பின் அமைப்பிலே பாவம்; கழுத்தின் வளைவிலே பாவம்; கையின் நெளிவிலே பாவம்; கண்ணிலே பாவம்; இதழ்களிலே பாவம்.

கல்லுக்கு உயிர் ஊட்டி, அதுவும் அழிவில்லாத உயிர் ஊட்டி, நம்முடன் நேருக்கு நேர் பேசவும் கதை சொல்லவும் நடனமாடவும் நாடகமே நடிக்கவும் செய்யும் எல்லோரா சிற்பக் கலையின் சிறப்பை அறிந்து கொள்ள உதாரணத்துக்கு ஒரு சிற்பத்தைப் பார்த்தால் போதும். பத்துத் தலை இராவணன் கைலாஸ கிரியைத் தூக்கியபோது, கைலாஸத்தில் நிகழ்ந்த குழப்பத்தைக் காட்டும் சிற்பம் இது. முகத்திலும் உடம்பின் ஒவ்வொரு நெளிவிலும் பயத்தைப் பிரதிபலிக்கும் தோற்றத்தில் பார்வதி தேவி வெகு இயற்கையாகப் பரமசிவனுடன் போய் ஒட்டிக் கொள்வதும், பார்வதியின் சேடி அங்கிருந்து வெருண்டு ஓடுவதுமான காட்சி உண்மையிலேயே மேற்படி சம்பவம் நம் கண் முன்னால் நிகழ்வது போன்ற பிரமையை நமக்குக் காண்பிக்கிறது.

இந்தக் கைலாஸக் கோயிலுள்ள சிற்பங்களையெல்லாம் நன்கு ஆராய்ந்து அவற்றின் கதைகளையெல்லாம் தெரிந்து கொண்டோமானால், அப்புறம் ஹிந்து சமயத்தைப்

பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டியது ஒன்றுமே இராதென்று சொல்லலாம். சிவ பெருமானும் விஷ்ணுமூர்த்தியும் பராசக்தியும் எத்தனை எத்தனை தோற்றம் கொண்டிருக்கிறார்களோ, எத்தனை எத்தனை லீலைகள் புரிந்திருக்கிறார்களோ, அவ்வளவையும் இங்கே கல்லிலே பொறித்து வைத்திருக்கிறார்கள். ஏன்? இராமாயணம், மகா பாரதம் ஆகிய இரண்டு பெரும் இதிகாசங்களையுங்கூடப் பாறைச் சுவரிலே சிறு சிறு வடிவங்களுடைய விஸ்தாரமான சிற்பக் காட்சியாக அமைத்திருக்கிறார்கள்.

'வழிகாட்டி' கூறியது உண்மை என்பதில் சந்தேகமில்லை. இந்த ஒரு கோயிலை நன்கு பார்த்து முடிப்பதற்கே மூன்று மாதம் வேண்டியதுதான்! ஆனால் இந்த உலகத்திலே நாம் செய்யவேண்டிய வேறு சில காரியங்களும் இருப்பதால், கைலாஸத்திலிருந்து கிளம்ப வேண்டியதாயிற்று. மேலும், இன்னொரு தடவை நமக்கெல்லாம் கைலாஸ யாத்திரை எப்படியும் இருக்கவே செய்கிறதல்லவா?

7. சிநேக பரம்பரை

அடுத்தாற்போல் புத்த சமயத்தைச் சேர்ந்த "விசுவகர்மா" என்னும் பத்தாவது குகைக் கோயிலைப் பார்த்தோம். பின்னர், ஜைன சமயத்துக்குரிய இருபத்தொன்பதாவது "தூமார்லேனா" (அல்லது சீதா நஹானி) கோயிலையும், முப்பத்து மூன்றாவது "இந்திர சபா" கோயிலையும் பார்த்தோம்.

இந்தக் கோயில்களின் கம்பீர சௌந்தரியத்தையும் வேலைப்பாடுகளையும் நன்கு அநுபவிப்பதற்கு இவற்றை முன்னால் பார்த்திருக்க வேண்டுமென்று தோன்றியது. முதலிலே கைலாஸத்தைப் பார்த்துவிட்டால் மற்ற எதிலும் கவனம் செலுத்துவது கடினமாயிருந்தது.

இந்த குகைக் கோயில்களில் மண்டபங்கள், தூண்கள் எல்லாம் பிரமாதந்தான். ஆனால் சிற்பங்களின் விஷயத்தில், கைலாஸச் சிற்பத்துக்கும் புத்த-ஜைன சிற்பங்களுக்கும் ஒரு வித்தியாசம் இருந்தது.

கைலாஸச் சிற்பங்களில், இது என்ன வடிவம், அது என்ன காட்சி என்று கவனித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும். புத்த குகைக் கோயில்களில் அவ்வளவு வேலையாக இந்தத் தொந்திரவு கிடையாது. உதாரணமாக, 'விசுவகர்மா'வில் நாங்கள் பார்த்த சிற்பங்களை வரிசையாகச் சொல்கிறேன்:—

(1) புத்தர் — முதல் பதிப்பு
(2) புத்தர் — இரண்டாம் பதிப்பு
(3) புத்தர் — மூன்றாம் பதிப்பு
(4) புத்தர் — நாலாம் பதிப்பு
(5) புத்தர் — ஐந்தாம் பதிப்பு.

இந்த மாதிரி பன்னிரண்டு, இருபத்து நாலு, நூற்றெட்டு பதிப்புக்கள் கூடச் சில கோயில்களில் காணப்படுகின்றன.

இதேவிதமாக, ஜைனர் குகைக் கோயில்களிலும், ஜைன வடிவங்களே பற்பல பெயர்களுடன் விளங்குகின்றன. அபூர்வமாக, கோயில் வெளிப்புறங்களில் இந்திரன், இந்திராணி முதலிய அரிய சிற்ப வடிவங்களும் காணப்படுகின்றன.

எல்லோரா குகைக் கோயில்களைப் பார்க்கும்போது, நமக்கு முக்கியமாகத் தோன்றும் எண்ணம் என்னவென்றால், நமது தேசத்தில் ஹிந்துக்களும் பௌத்தர்களும் ஜைனர்களும் எப்போதுமே சண்டை போட்டுக் கொண்டிருக்கவில்லை, பரஸ்பர சிநேக பாவத்துடன் வாழ்ந்த காலமும் உண்டு என்பதுதான். இல்லாவிட்டால், ஒரே மலையிலே அடுத்து அடுத்து ஹிந்துமதக் கோயில்களும், இரண்டு பக்கங்களிலும் பௌத்த ஜைனக் கோயில்களும் அமைக்கப் படுதல் சாத்தியமாயிருந்திராதல்லவா?

எல்லோரா விந்தைகளைப் பார்த்த பிறகு, "இதைக் காட்டிலும் பெரிய அதிசயம் அஜந்தாவில் என்ன இருக்கப் போகிறது?" என்றுதான் தோன்றியது. அது எவ்வளவு தவறான எண்ணம் என்பது மறுநாள் அஜந்தாவில் தெரிய வந்தது.

அவ்விதம் எல்லோரா விந்தைகளைத் தோற்கடித்த அஜந்தா அதிசயங்களைத் தயவு செய்து இந்த வருஷத்துக் "கல்கி" தீபாவளி மலரில் கண்டு களிக்கும்படி நேயர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தைரியம் படைத்த போர் வீரர்களில் அநேகர் இந்தியாவின் நர்ஸ்களுக் காகத் தம் உயிரையும் தத்தம் செய்யக் கடமைப் பட்டவர்கள்

சில கேஸ்கள் சாதாரணமானவை. சொஸ்- ...டந்து சில நாட்களுக்குள் தத்தம் யூனிட்டுகளுக்குத் திரும்பக் கூடியவர்களாகின்றனர். ஆனால் கோர மாகக் காயமடைந்த சிலர், வாழ்விற்கும் சாவிற்கும் இடையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். அந்நிலையில் ஏ. என். எஸ். நர்ஸ்களின் எல்லை யற்ற பொறுமையும் நிரம்பட்ட தேர்ச்சியும்தான் அவர்கள் குணமடைய உயர்ந்த சகாயமாக இருக்கிறது. இந்தச் சேவை மிகவும் சிறந்தது. எந்த ஸ்திரீக்கும் உகந்தது. யுத்தத்தின் கோரம் அதிகமாக ஆக நர்ஸ்களின் தேவை யும் அதிகரிக்கிறது. இத்தகைய அரிய சேவைக்குத் தாமே வந்துதவ உரிய சந்தர்ப்பம் இதுவே. முன் அனுபவம் அவசியமில்லை. வேலையில் சேருமுன் சிறு பயிற்சி அளிக்கப்படுகிறது. ஏற்கனவே நர்ஸ் வேலையில் தேர்ந்தவர்கள் நேரடியாக சேர்ந்து விடலாம். அனுபவ முள்ளவர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கப்படும். திருப்தி கரமான சேவையின் முடிவில் சன்மானம் வழங்கப்படும். யோக்யதா பத்திரம் பெற்ற நர்ஸ்கள் ஐ. எம். என். எஸ். நிபந்தனை களுக்குச் சம்மத மில்லாவிடில் விசேஷ நிபந்தனைப்படி ஏ. என். எஸ்.-ல் சேரலாம். மற்ற விவரங்களுக்கு உங்கள் டிவிஷனிலுள்ள லேடி சூப்பரின்டெண்டெண்ட், ஸெயின்ட் ஜான் அம்புலன்ஸ் ப்ரிகேட், ஓவர்ஸீஸ்க்கு எழுதவும். இந்த விலாஸத்தை அறிந்து கொள்ள முடியாமல் போனால் டைரக்டர் ஜெனரல், இந்தியன் மெடிகல் சர்வீஸ், நியூ டெல்லி என்ற விலாஸத்திற்கு எழுதுங்கள்.



ஏ. என். எஸ்.

(ஆக்ஸிலரி நர்ஸிங் சர்வீஸ்)

இதில் சேர்ந்து இந்தியாவுக்குச் சேவை செய்யுங்கள்.

AAA. 993

கர்நாடக சங்கீத வித்வான்கள்

சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர்

43. திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள்

கதா காலட்சேபம் செய்வதில் இணையற்று விளங்கியவர்களில் பஞ்சாபகேச சாஸ்திரிகளும் ஒருவர். பால்யத்திலேயே அநேக சம்ஸ்கிருத பண்டிதர்களிடத்தில் பாடம் வாசித்து, வடமொழியில் நல்ல ஞானத்தைச் சம்பாதித்துக் கொண்டார். அந்த பலத்தையும் இயற்கையாகவே ஏற்பட்டிருந்த சங்கீத ஞானத்தையும் கொண்டு, ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை பௌராணிக பந்தாவில் வெகு அழகாக உபன்யாசம் செய்து வந்தார்.

அக்காலத்தில் மிக்கக் கியாதியுடன் விளங்கின தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் முதலியவர்களின் கதைகளைக் கேட்டு, தாமும் புராணம் சொல்வதை நிறுத்தி ஹரிகதைகள் செய்ய ஆவலுற்றார். அதற்கு வேணுமென்கிற நிரூபணங்கள் இல்லாததினால் தஞ்சை ஸ்ரீ கிருஷ்ண பாகவதரை அடைந்து சில நிரூபணங்கள் கொடுத்து ஒத்தாசை செய்ய வேணுமென்று கேட்டதற்கு, மேற்படியார் கொடுக்க முடியாதென்று மறுதளித்து விட்டார். இதில் கொஞ்சம் மனத் தாங்கல் சாஸ்திரிகளுக்கு ஏற்பட்டிருந்தது.

இருந்தாலும், கர்நாடக சங்கீதத்தில் ஆரம்பத்திலேயே நல்ல ஞானம் உள்ளவராகையால் எப்படியாவது கதை செய்ய வேணுமென்ற ஆவல் இவருக்கு அதிகரித்துக்கொண்டே வந்தது. அதினால் நிரூபணங்கள் எங்கு கிடைக்கக் கூடும் என்பதை ஆங்காங்கு விசாரித்துக் கொண்டு என்னிடம் வந்தார். நான் “தருகிறேன்” என்று சொல்லி, என்னுடன் கொஞ்ச நாள் வாசிக்கச் சொன்னேன்.

ஒரு நாள் நான் ராமாயணம் கேட்க வேணுமென்று இவரை அபேக்ஷிக்க, அவர் அவ்விதமே “விபீஷண சரணாகதி” கட்டத்தை அமர்க்களமாய் உபன்யாசம் செய்து, ஏராளமாய்க் கூடியிருந்த ஜனங்களைப் பிரமிக்கும்படி செய்தார். நானும் ஏற்கெனவே இவருடைய யோக்கியதையைத் தெரிந்து கொள்ளாதவனாகையால், அன்று இவருடைய கர்நாடக சங்கீத ஞானத்தின் வலிவையும் பாவனா சக்தியையும், வடமொழியின் பாண்டித்தியத்தையும் கேட்டுப் பிரமித்து அக மகிழ்ந்தேன். உபன்யாசம் முடிந்தவுடன், “சாஸ்திரிகளே! உங்களுடைய சாமர்த்தியத்தை இவ்வளவு நாளும் காட்டாமல் என்னை ஏமாற்றி விட்டீரே” என்று சொன்னேன். அவர் புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டு அங்கீகாரம் செய்தார். பிறகு சில நிரூபணங்களை அளித்து அதன் மார்க்கத்தையும் தெரிவித்தேன். இவைகளை வைத்துக்கொண்டு, இதர சாதகத்தினால், சுயமாக நல்ல நவீன வர்ண மெட்டுக்களுடன் கவனங்கள் செய்து கொண்டு, கதை செய்தார்.

வரவர சுக்கில பட்சத்துச் சந்திரன் மாதிரி இவருடைய புகழ் விருத்தி அடைந்தது. ஜனங்களுக்கு அதிக பிரமை இவர் காலட்சேபங்களில் ஏற்பட்டது. உபசாதகர்கள் இவருக்கு அமைந்தது போல் இதர பாகவதர்களுக்கு அமையவே இல்லை என்று சொல்லலாம்.

பிரதி கதைகளுக்கும் ஸ்ரீ தியாகப் பிரும்மக் கீர்த்தனங்களை அழகாய்ப் பாடிச் சிறப்பித்து வந்தார். எந்த உருப்படியை இவர் பாடினாலும், கச்சிதமாயும், பிசிறு இல்லாமலும், காதுக்கு மிகவும் ரம்மியமாயும், தாளப் பிடிப்புடனும் இருக்கும். உபன்யாச சக்தியில் ரொம்பவும் தேர்ச்சி அடைந்தவர். ஜனங்களுக்குக் கவர்ச்சியும் ருசியும் உண்டாகும்படி, கற்பனா சக்தியுடன் பேசுவார். இவர் தியாகப் பிரும்ம உத்ஸவத்தில் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகித்து வெகு காலம் கைங்கரியம் செய்து வந்தார்.

வருஷந்தோறும் தம்முடைய ஜாகையில், எல்லா வித்வான்களையும் தருவித்து, ஏராளமான பொருள் செலவு செய்து, ஸ்ரீ ராமநவமி உத்ஸவத்தை நிரம்பவும் சிறப்பாக நடத்தி வந்தார்.

ஆகாச வெடி

"அமெரிக்கர்கள் இந்தியாவுக்குப் போனால் மூன்று அற்புதங்களைக் காணலாம்: (1) இமயமலை, (2) தாஜ்மஹால், (3) காந்திமகான்" என்று ரூபஸ் ஜோன்ஸ் என்னும் அமெரிக்கர் கூறியிருக்கிறார்.

நாலாவது அற்புதம் ஒன்றையும் காணலாம். நமது 'கல்கி' தீபாவளி மலர்!

★

"மாளவியாஜி என் வயதில் இருபத்தைந்தைக் குறைத்து 100 வயது என்ற போதிலும் நான் 125 வருஷங்கள் வாழ விரும்புகிறேன்."

—மகாத்மாஜி.

மகாத்மாஜி 125 வருஷம் வாழ விரும்புவதை நாம் அடியோடு விரும்பவில்லை. அவர் என்றும் 75 வயதாக திடகாத்திரமாயிருப்பதையே விரும்புகிறோம்.

★

"சிறையில் நேருஜி இன்புளுயன்ஸா ஜுரத்தில் கஷ்டப்பட்டதை இந்திய சர்க்கார் ஜல தோஷத்தினால் என்று கூறி விட்டார்கள்."

—ஒரு செய்தி.

தனக்குக் கிடைக்க வேண்டிய கீர்த்தியை ஜல தோஷம் அடித்துக் கொண்டு போனதற்காக இன்புளுயன்ஸா ஜுரம் இந்திய சர்க்கார் மீது கஷ்ட நஷ்ட வழக்குத் தொடரலாம்.

"சென்னை கார்ப்பொரேஷன் பிறந்து 256 வருஷங்கள் ஆகின்றன."

—டாக்டர் நியமதுல்லா.

ஊழல் என்ற வார்த்தை நமது தமிழ் பாஷைக்கு வந்தும் 256 வருஷங்களே ஆகியிருக்க வேண்டும்!

★

"யூகோஸ்லேவியாவில் டப்ருசேவந்நு கேனு முதலிய இடங்களை டிட்டோ படைகள் கைப்பற்றின."

—ஒரு செய்தி.

அதி எட்லனு கைப்பற்றினருனி ஒக ஆந்திர சோதர்லாரு அடுகுதாரு!

★

"லாகூர் ஹைகோர்ட் ஜட்ஜ் அப்துர் ரஹ்மான் தமது காரில் சென்று கொண்டிருந்தபோது கார் ஒரு லாரியுடன் மோதி ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது. உடனேயே லாரி டிரைவர் எங்கேயோ ஓடி மறைந்து விட்டான்."

—ஒரு செய்தி.



அப்துர் ரஹ்மானுக்கு விபத்து நேர்ந்து விட்டதால் ஹைகோர்ட் ஜட்ஜ் பதவி தனக்குக் கிடைக்கக் கூடும் என்று ஓடியிருக்கலாம்!

★

"மதுரையிலிருந்து சில விலை உயர்ந்த பட்டுக்களைக் கள்ளத்தனமாக ஏற்றிச் சென்ற வியாபாரிகளைப் போலீஸார் பிடித்து விட்டனர்."


—ஒரு செய்தி.

அவை போலீஸார் கண்களில் பட்டு விட்டன போலும்!



தாய்ப் பட்டாசு:— பண்டிகையும் அதுவுமாய் வீட்டுக்குள்ளேயே உபத்திரவம் செய்து கொண்டிருக்கிறாயே? வெளியே போய் அந்த புஸ் வாணத்துடன் விளையாடேன்!

குட்டிப் பட்டாசு:—நான் மாட்டேன்; அது எப்போது பார்த்தாலும் எரிந்து எரிந்து விழுகிறது!



படிப்பு மட்டும் போதாது

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

ரைப்ய ரிஷியினுடைய சிஷ்யன் பிருஹத்யும்னன் என்கிற அரசன் ஒரு பெரிய யாகம் செய்தான். அதை நடத்திக்கொடுக்க தன் ஆசாரியருடைய குமாரர்களாகிய பராவஸு அர்வாவஸு இருவர்களையும் அனுப்பும்படி அரசன் கேட்டுக் கொண்டார். மிகவும் மகிழ்ச்சியடைந்து பிதாவினுடைய அனுமதியைப் பெற்றுக் கொண்டு அவர்களிருவரும் அரசனுடைய நகரத்துக்குச் சென்றார்கள்.

சத்ர யாகத்திற்காக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கையில் ஒருநாள் பராவஸு தன் மனைவியைப் பார்த்துவர விரும்பினான். இரவில் தனியாக நடந்து தன் ஆசிரமம் இருந்த வனத்திற்கு பொழுது விடிவதற்குமுன் இருட்டிலேயே வந்து சேர்ந்தான். அப்போது அங்கே புதரண்டை தோல் போர்த்துக் கொண்டு இருட்டில் இருந்த ரைப்யரைக் கண்டு காட்டு மிருகம் என்று எண்ணிப் பயந்து கையிலிருந்த ஆயுதத்தை வீசி அவரைக் கொன்றுவிட்டான்.



பிறகு துக்கப்பட்டு இது பரத்வாஜர் இட்ட சாபத்தின் பயன் என்று தெரிந்து கொண்டான். பிதாவுக்குச் செய்ய வேண்டிய பிரேத காரியங்களை அவசர அவசரமாகச் செய்து விட்டு அர்வாவஸுவினிடம் சென்று நடந்ததைச் சொன்னான். "அரசனுடைய யாக காரியத்திற்குக் குந்தகம் ஏற்படக்கூடாது. தெரியாமல் தகப்பனைக் கொன்ற, என் பிரம்மஹத்தி தோஷத்தை நீக்குவதற்குச் செய்ய வேண்டிய பிராயச்சித்த விரதத்தை நீ அனுசரித்து எனக்காக நடத்துவாயாக. கொல்ல வேண்டும் என்கிற எண்ணமில்லாமல் கொன்ற பாபம் அவ்வளவு பெரிதல்ல. ஆகையால் எனக்காக நீ விரதம் இருந்து நடத்திவிட்டாயானால், நான் ஒருவனே அரசனுடைய யாகத்தைக் குந்தகமின்றி நடத்தி விடுகிறேன். தனியாக இருந்து அதைச் செய்ய உன்னால் முடியாது. ஆகையால் இவ்வாறு சொல்லுகிறேன்" என்று பராவஸு சொன்னதை தர்மவானான தம்பி ஒப்புக் கொண்டான்.

"அரசனுடைய சத்ர யாகத்தைச் சரிவர நீ நடத்தி விடு. அதற்கு என்னுடைய சாமர்த்தியம் போதாது. பிரம்மஹத்தி தோஷத்திற்கு நான் உனக்காகத் தவமிருந்து கடமை செலுத்துகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தம்பி வனம் சென்றான்.

அவ்வாறே தர்மாத்மாவான அர்வாவஸு, அண்ணனுடைய பிரம்மஹத்தி தோஷத்தைத் தானே வகித்துக் கொண்டு பிராயச்சித்தம் செய்துவிட்டு. பிறகு சத்ர யாகத்திற்கு வந்து சேர்ந்தான்.

தானே பிராயச்சித்தம் செய்யாதபடியால் பராவஸுவின் பிரம்மஹத்தி

தோஷம் நீங்கவில்லை. அது அவன் உள்ளத்தில் பாப எண்ணங்களை உண்டாக்கிக் கொண்டே இருந்தது. யாக சாலைக்குத் தம்பி வந்ததைப் பார்த்ததும் பராவசு அவன்மேல் பொறாமை கொண்டான். தம்பியின் மேல் அக்கிரமமாக அபவாதம் சுமத்தி அவமானப் படுத்த நிச்சயித்தான்.



"அவசியம் தாங்கள் எங்கள் சங்கத்திற்கு வந்து பிரசங்கம் செய்ய வேண்டும். எங்கள் வேண்டுகோளைத் தட்டக் கூடாது."

"நீங்கள் எல்லோரும்தான் கூட்டமாக வந்துவிட்டீர்களே! அங்கே நான் எதற்காக வரவேண்டும்? இங்கேயேதான் பிரசங்கம் செய்து விடுகிறேனே!"

"பிரம்மஹத்தியைச் செய்த இவன் எவ்வாறு யாகசாலையில் பிரவேசிக்கலாம்?" என்று சபையிலிருந்த அரசனிடம் பராவசு உரக்கச் சொன்னான்.

இதை அரசன் கேட்டவுடன் அர்வாவசுவை உடனே அப்புறப்படுத்திவிட வேலைக்காரர்களுக்கு உத்தரவிட்டான்.

"பிரம்மஹத்தி என்னால் செய்யப்பட்டதல்ல" என்று அர்வாவசு முறையிட்டான். யாரும் அவன் பேச்சைக் கேட்கவில்லை. மிக்க அவமானத்துடன் யாகசாலையிலிருந்து துரத்தப்பட்டான்.

"சத்தியமாகச் சொல்லுகிறேன் பிரம்மஹத்தி செய்தது என் அண்ணன். அவனுக்காக நான் விரதம் இருந்து அவனைக் காப்பாற்றினேன்" என்று அர்வாவசு திரும்பத் திரும்பச் சொன்னான்.

"பிரம்மஹத்தியும் செய்து விட்டு அதற்காக விரதமும் இருந்துவிட்டு பொய்யாக அண்ணன்மேல் பழி போடுகிறாயா?" என்று அனைவரும் அவனை முன்னைவிட அதிகமாக ஏசித் தூற்றினார்கள்.

இவ்வாறு அநியாயமாக அபவாதத்துக்கு இரையாக்கப்பட்டு 'பொய்யன்' என்றும் ஏசப்பட்ட தர்மாத்மாவான அர்வாவசு பேசாமல் வனம் சென்றான். பிறகு உக்கிரமான தவம் செய்தான்.

"தேவர்கள் பிரசன்னமாகி, நீ தர்மவான்! உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்க அவன் கோபம் அதற்குள் மாறி ஆறி இறந்தவனாகி தன்னுடைய பிதா மறுபடியும் உயிர் படைத்து வர வேண்டுமென்றும் தன் சகோதரன் தோஷமில்லாதவனாக வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். "அப்படியே ஆகுக" என்று தேவர்களும் வரம் கொடுத்தார்கள்.

இந்தக் கதையை லோமசர் யுதிஷ்டிரனுக்கு ரைப்யாசிரமத் தண்டை சொல்லி, "பாண்டவர்களே! கங்கையில் ஸ்நானம் செய்யுங்கள்! புண்ணிய நதியில் கோபத்தை ஒழியுங்கள்!" என்றார்.

அர்வாவசுவும் பராவசுவும் ஒரே தகப்பன் மக்கள். ரைப்யர் மகாவித்வான். அவரிடம் இருவரும் கூடவே படித்துப் பண்டிதர்களானார்கள். ஆயினும் படிப்பு வேறு, குணம் வேறு. நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்தபின் ஒருவன் தீயச் செயலில் புக மாட்டான் என்பது உண்மை. ஆனால் அடைந்த அறிவானது உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து நிலையாக இருக்க வேண்டும். அப்போதே படிப்பும் சீலமும் ஒன்றாகும்.

பொல்லாத திரௌபதி

வஸந்தன்

மலர்களைப் போல் அழகான வஸ்து உலகில் இல்லை என்று கூறுகிறார்கள். அதுவும், மலர்களை மாலையாகத் தொடுத்தால் எவ்வளவோ அழகாயிருக்கிறது. ஆனால், சொர்ணம் பல வர்ண மலர்களை மாலையாகத் தொடுப்பதோ எல்லாவற்றையும் விட அழகான காட்சிதான்.

'டாண்' என்று சாயங்காலம் நாலு மணி அடித்ததும் சொர்ணம் இரண்டு பெரிய கூடை நிறையப் பூவுடன் பூக்கடைக்கு வந்து விடுவாள். இரண்டே மணி நேரத்தில் அத்தனை பூவும் பறந்து போகும். அவளிடம் பூ வாங்க வருகிறவர்கள் அவ்வளவு பேரும் மலர்களை விடச் சொர்ணம் அதிக அழகா, அல்லது சொர்ணத்தை விட மலர்கள் அதிக அழகா என்று தெரியாமல் திகைப்பார்கள்.

ஒரு மாதத்திற்கு முன் ஒரு நாள் சாயங்காலம், "என்னம்மா! கேட்டுக் கொண்டே யிருக்கிறேன், பேசாமல் இருக்கிறாயே!" என்ற அதட்டல் குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தாள் சொர்ணம். ஆஜானுபாகுவான முத்து அங்கே நின்று கொண்டிருந்தான்.



"உன் குடை கெட்டுப்போய் விட்டதென்று சொன்னாயே. அது கோபாலவிட மல்லவா இருக்கிறது? அதைக் கேட்டு வாங்கிக் கொள்கிறதுதானே?"

"அது எனக்குத் தெரியும். கோபாலன் குடையை ரிப்பேர் செய்யட்டுமென்று தான் காத்திருக்கிறேன்."

"நான் சும்மாவா இருக்கிறேன். நேரம் பண்ணிக்கிட்டு இருக்கிறபோது, ரொம்பத்தான் அமுல் பண்ணுகிறாயே! அவசரமா யிருந்தால் வேறு கடையில் வாங்கிக் கொள்" என்றாள் சொர்ணம். ஆனால், அந்த இளைஞன் அவள் சொன்னபடி வேறு கடைக்குப் போய்விடவில்லை; அவளிடமேதான் பூ வாங்கிக் கொண்டு போனான்.

இதுதான் அவர்கள் முதல் சந்திப்பு.

இதற்குப் பிறகு பிரதிதினமும் சாயங்காலம் முத்து அவளிடம் ஒரு அணாவுக்கு மல்லிகைப் பூ வாங்கிக் கொண்டு போவான். அவன் அவளுடன் ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை. ஆனால், அவளை விழுங்கி விடுபவன்போல் அவன் பார்ப்பான். அவனைக் கண்டதும் சொர்ணத்தின் உடம்பு என்ன காரணத்தினாலோ படபடக்கும். திடீரென்று முகம் சிவந்து தலை கவிழும்.

சாயங்காலம் ஆனதும், சொர்ணம் அவனுக்காக மல்லிகைப் பூவை எடுத்து வாழை யிலையில் தனியாகக் கட்டி வைத்து விடுவாள். என்றைக்காவது ஒரு நாள் முத்து வராவிட்டால் பெரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பி விடுவாள். அவர் யார்? என்ன வேலை? யாருக்காகப் பூ வாங்கிக் கொண்டு போகிறார்? என்றெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவள் உள்ளம் துடிதுடித்தது. ஆனால் எப்படிக் கேட்பது? எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது?

இந்தக் கவலையை வெகு சீக்கிரத்திலேயே தீர்த்து விட்டான் முத்து. ஒரு நாள், பூ வாங்கும்போது, அவனே பேச்சை ஆரம்பித்தான். அன்று அவள் ஒரு அணாவுக்குக் கொடுத்த பூ, ரொம்ப ரொம்பக் கொஞ்சமாக இருந்தது. அதற்காகத் தன் அதிருப்தியைத் தெரிவிக்க வேண்டி, "ஒரு அணாவுக்கு இவ்வளவு பூ கொடுக்கிறாயே! உனக்கு கஷ்டம் வராதா?" என்றான் முத்து.

"கேலியாகத்தான் இருக்கும். மல்லிகைப் பூ உனக்கு எங்கே கிடைக்குது?" என்றாள் சொர்ணம்.

"உன்னிடந்தான் கிடைக்குது. என்னால் தூக்கிக்கிட்டுத்தான் போக முடியலே. நாளைக்கு ஒரு கூலிக்காரனைக் கூப்பிட்டு வரட்டுமா?" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே பூவை வாங்கிக்கொண்டு போனான் முத்து.



இன்னொரு நாள், "ஒரு அணாவுக்கு மருந்து, கொடேன்! மருந்து கொடுக்கிறப்பலே துளியூண்டு பூ கொடுக்கிறவளாச்சே நீ!" என்பான் முத்து.

"என்னமோ என்னைக் கண்டதிலிருந்து உனக்கு உடம்பு சரியாத்தான் இல்லை. நல்ல மருந்தாக முதுகில் கொடுக்கத்தான் வேண்டும்!" என்று சொல்லிக் குறும்புப் புன்னகை செய்வாள் சொர்ணம்.

ஏழைப் பூக்காரி சொர்ணத்தின் வாழ்வில் சாயங்காலத்தில் அந்த இரண்டு நிமிஷங்கள் இன்ப வேளையாக இருந்தது. ஆனால், அவன் யாருக்காகப் பூ வாங்கிக்கொண்டு போகிறான்?—இந்தக் கேள்வி மட்டும் அவளை எப்பொழுதும் வாட்டிக் கொண்டிருந்தது.

★

சொர்ணத்திற்குத் தாயைத் தவிர வேறு உறவினர்கள் யாரும் இல்லை. அவள் தாய் இதே பூ வியாபாரம் செய்து இத்தனை வருஷமாய்க் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாள். சமீபத்தில் அவள் நோயுற்றுப் படுத்த படுக்கையாகி விட்டாள். இதனால் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டிய சொர்ணத்தை அவள் தன்னந்தனியே பூ விற்க அனுப்பும்படி நேர்ந்தது.

ஒரு நாள் சொர்ணம் எங்கெங்கேயோ மல்லிகைப் பூவுக்காக அலைந்தாள். கிடைக்கவில்லை. "ஐயோ! என்ன செய்வது? சாயங்காலம் அவருக்கு எப்படிப் பூ கொடுப்பது?" என்று வருந்தினாள். ஆகவே, அன்று முத்து பூவுக்காக வந்ததும், "இன்றைக்கு மல்லிகைப் பூ கிடைக்கவில்லை" என்று தெரிவித்து விட்டாள் சொர்ணம். "நான் என்ன செய்வேன்? திரௌபதைக்குப் பூ வாங்கிக் கொண்டு போக வேண்டுமே! நான் வெறும் கையாய் எப்படிப் போவேன்!" என்று மனம் கலங்கினான் முத்து.

"யார் அந்தத் திரௌபதை?" என்று கேட்டு விடுவோமா என்று பார்த்தாள். பேச நாவெழவில்லை. முத்து போய் வெகு நேரம்வரை சொர்ணம் மனம் கலங்கி உட்கார்ந்திருந்தாள்.

யாரோ ஒரு திரௌபதை அவன் உள்ளத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். அவளுக்காகத் தினமும் முத்து பூ வாங்கிக் கொண்டு போகிறான் என்று நினைத்தாள் சொர்ணம். உண்மை அதுவானால், எதற்காக அவன் அவளைப் பார்த்துப் புன்னகை செய்ய வேண்டும்? எதற்காகப் பசப்பு வார்த்தைகள் பேச வேண்டும்?

இன்னொரு சந்தேகம் அவளுக்கு வந்தது. திரௌபதி என்பது அவன் பெண்டாட்டிதானோ என்னமோ? அப்படியிருந்தாலும் சொர்ணத்துக்கு எந்த விதத்தில் நல்லது? என்ன இருந்தாலும் விசாரித்துப் பார்த்து அவன் சூழ்ச்சியை வெட்ட வெளிச்சமாக்கி விடுவதென்று அவள் முடிவுகட்டினாள்.

மறுநாள் முத்துவிடம் அவள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அவன் முகத்தைப் பார்த்ததுமே முத்து திடுக்கிட்டான்.

"ஏன் என் மேல் கோபமா?" என்றான் முத்து. சொர்ணம் பதில் பேசவில்லை. "கோபம் தணியட்டும், நாளைக்குப் பேசிக் கொள்கிறேன்" என்று சொல்லி விட்டுப் போனான் முத்து.

"தாத்தா! அதோ போகிறாரே, அவர்தான் நான் சொன்ன மனிதர். அவர் கூடவே நீங்களும் போங்கள்! எங்கே போகிறார், அவர் வீடு எங்கே இருக்கிறது, கல்யாணமாயிற்றா இல்லையா, திரௌபதி என்கிறது யார், இதையெல்லாம் கேட்டு விசாரித்துக் கொண்டு வாருங்கள்" என்றாள் சொர்ணம், பக்கத்தில் பூ விற்றுக் கொண்டிருந்த கிழவனைப் பார்த்து. அந்தக் கிழவனிடம் ஏற்கனவே தன் குறையைச் சொல்லி முறையிட்டிருந்தாள் சொர்ணம். ஆகவே, கிழவனும் முத்துவைப் பின்தொடர்ந்து சென்றான்.



★

அன்று இரவு கிழவன் திரும்பி வந்து சொர்ணத்திடம் பின்வரும் விவரங்களைத் தெரிவித்தான்: முத்து ஒரு மில்லில் வேலை செய்பவன். அறுபது ரூபாய் சம்பளம். அவனுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. அந்தத் தெருவில் திரௌபதி என்று யாரோ ஒரு நடத்தை கெட்டவள் இருக்கிறாள். ஆனால் அவளுக்கும் முத்துவுக்கும் சம்பந்தமிருக்கிறதா என்பதை மட்டும் கிழவனால் அறிந்து கொள்ள முடியவில்லை.

சொர்ணத்திற்கு அழுகை பீறிக் கொண்டு வந்தது. அந்தத் திரௌபதைக்குப் பூ வாங்கிக் கொண்டு போகிற மனிதனுடன் தான் இத்தனை நாள் குலாவியதை நினைக்க அவள் நெஞ்சம் குமுறிற்று. இரவு முழுதும் அவள் தூங்கவில்லை. இனி அந்த மனிதன் முகத்தில் விழிக்கவே கூடாது. விழித்தாலும் மகாபாவம் என்று நிர்மானித்தாள். "ஏன் அம்மா அழுகிறாய்?" என்று கேட்டாள் தாயார். "ஒன்றுமில்லை. இன்று காலை கையில் ஏதோ முள் தைத்து விட்டது" என்று பொய் சொன்னாள் சொர்ணம். மனதில் தைத்த முள்ளின் வேதனையை அவள் தன் தாயிடம் சொல்லவில்லை.

மறுநாள் அவள் பூ விற்கப் போகவில்லை. சாயங்காலம் அவள் மனப் புண்ணை ஆற்றிக் கொள்வதற்காகக் கோயிலுக்குப் போனாள். திரும்பி வந்ததும் ஒரு பிள்ளையாண்டான் தன்னைத் தேடி வீட்டுக்கு வந்ததாகக் கிழவி சொன்னதும், அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "ஆள் உயரமாக இருந்தான். மேலே துண்டு போட்டுக் கொண்டிருந்தான்" என்று அம்மா அழகாக அடையாளம் சொன்னாள். இருந்தாலும், சொர்ணத்துக்கு அது யாரென்பது விளங்கி விட்டது.

"அவன்தான் அம்மா, முத்து! அவனை ஏன் உள்ளே விட்டாய்? முறத்தால் இரண்டு முதுகில் போட்டு அனுப்புகிறதுதானே?" என்றாள் சொர்ணம். "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்றாள் அம்மா திடுக்கிட்டவளாய்.

அவள் மட்டும் அப்பொழுது திடுக்கிடவில்லை. இந்தச் சம்பாஷணையை வாசலில் நின்று கேட்டுக் கொண்டிருந்த முத்துவும் திடுக்கிட்டான். எவ்வளவோ கஷ்டப்பட்டு அவள் வீட்டைத் தேடிக் கொண்டுவந்த அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போய் விடலாமா என்று நினைத்தான். பிறகு சமாளித்துக் கொண்டு, "ஏன்? உன் கையாலேதான் அந்தத் தண்டனையைக் கொடேன்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான்.

"பூ வாங்கிக்கொண்டு அந்தத் திரௌபதியிடம் போகிறது தானே? இங்கே ஏன் வந்தாய்?" என்றுன் சொர்ணம்.

முத்துவின் முகம் பரிதாபமாய் மாறிற்று.

"இனிமேல் அந்தப் பக்கம் அடியெடுத்து வைக்கப் போகிறதில்லை. இத்தனை நாள் திரௌபதிக்குப் பூ வாங்கிப் போட்டு, 'அம்மா தாயே, எப்படியாவது சொர்ணத்தை எனக்குக் கிடைக்கும்படி செய்யேன்' என்று வேண்டிக்கொண்டதற்கு என்ன பலன் கிடைத்தது?" என்றுன் முத்து.

"நீ பூ வாங்கிக்கொண்டு போனது திரௌபதி அம்மனுக்கா? திரௌபதி என்று ஒரு பொல்லாத சிறுக்கி உங்கள் தெருவில் இருக்கிருளாமே? அவளுக்கு இல்லையா?"

"அந்தச் சிறுக்கியைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. அவள் பொல்லாதவளோ, இல்லையோ அதுவும் எனக்குத் தெரியாது. ஆனல் திரௌபதி அம்மன் பொல்லாதவள்தான். இல்லை என்றுல் இரண்டு மாதமாகப் பூவினுல் அர்ச்சனை செய்து வேண்டிக்கொண்ட எனக்கு மறுத்தால் அர்ச்சனை செய்யும்படி நீ சொல்வாயா?"

இந்தச் சமயத்தில், வாசலில் சத்தத்தைக் கேட்டு, "யார் அது?" என்று கேட்டுக் கொண்டே வெளியே தள்ளாடி நடந்து வந்தாள் படுக்கையில் கிடந்த கிழவி. "எல்லாம் சொல்லுகிறேன், வா" என்று பதில் கூறிவிட்டு சொர்ணம் உள்ளே போனுள். அப்பொழுது வெட்கத்தால் அவள் உடம்பு பல திறுசாக வளைந்தது.

இந்த சம்பவம் நடந்த பிறகு, முத்து மலரும் கையுமாகத் திரௌபதியம்மன் கோவிலுக்குப் போவதில்லை. சொர்ணத்தின் மலர்க் கைகளைப் பிடித்துக் கொண்டுதான் போகிறுன்.

கனவும் நனவும்



காலக்ஷேபம்

புது வேலை

கப்பு:—என்னப்பா முத்து! இப்போ என்ன வேலை பார்த்துண்டிருக்கே?

முத்து:—எல்லாம் அந்த கிருஷ்ண பரமாத்மா ராஜசூய யாகத்திலே பார்த்தாரே, அந்த வேலையைத் தான் பார்க்கிறேன்.

கப்பு:—அது என்னப்பா புது வேலை?

முத்து:—அதுதான், இலை எடுத்து போடற வேலைங்க. —எல். எஸ். நாகராஜன்.

★

சந்தோஷச் செய்தி!

பேரன்:—பாட்டி! அம்மங்காளுக்கு கல்யாணம் என்று தந்தி வந்திருக்கிறது.

பாட்டி (தந்தியை வாங்கிக் கொண்டு):—அட எழவே, தந்திதான் அடிச்சாளே அபசகுனம் மாதிரி! கொஞ்சம் மஞ்சள் தடவி அனுப்ப மாட்டாளே?

—என். ராஜேசுவரி.

★

காலிப்படம்

சித்திர உபாத்தியாயர்:—ஏண்டா இந்தக் காகிதத்திலே நீ ஒன்றுமே எழுதவில்லையே, இது என்ன படம்?

பையன்:—இது மாடு புல் தின்கிற படம்.

உபா:—என்ன? இந்தப் படத்தில் புல்லைக் காணுமே?

பையன்:—அதை மாடு தின்று விட்டது, ஸார்.

உபா:—அப்படியானால் மாடு எங்கே?

பையன்:—என்ன ஸார்? புல்லைத் தின்ன பிறகு மாடு எதற்காக அங்கே இருக்கப் போகிறது? —ஜி. சுவாமிநாதன்.

★

நம்புங்கள்!

காலேஜ் புரொபஸர்:—ஏண்டா ரகு! நேற்று நீ 'லா'வைப் பற்றி ஏதோ பேசினாயாமே? உனக்கு ரொம்பத் தெரியுமோ?

ரகுநாத் (சட்ட மாணவன்):—ஐயையோ! யார் சொன்னது? உங்கள் பெண் நீலாவைப் பற்றி நான் ஒன்றுமே பேசவில்லையே?

—எல். நாகப்பா

பசிக்கவில்லை!

தகப்பனார்:—நாளைக்குக் கணக்குப் பரீக்ஷையாயிற்றே. பழைய கணக்கையெல்லாம் பார்த்துவிட்டாயா?

பிட்டு:—எனக்குப் பசிக்கவில்லை அப்பா. இப்போதுதான் சாப்பிட்டேன்

தகப்பனார்:—நான் பழைய கணக்கைப் பார்த்தாயா என்று கேட்டால் பசிக்கவில்லை என்கிறாயே? என்னடா அது?

பிட்டு:—பசித்தவன் தானே பழைய கணக்கைப் பார்ப்பான், அப்பா?

கே. வி. ஸ்ரீனிவாஸன்.

★

சரியான பேர் வழி

ஒருவர் வீட்டில் "ஜோஸ்யம் பார்க்கப்படும். ஜோஸ்யம் பார்க்க ரூபாய் ஒன்று. உண்மையல்ல என்று நிரூபிப்பவர்களுக்கு ரூபாய் 50 இனாம்" என்று எழுதியிருந்தது. இதைப் பார்த்து அவருடைய நண்பர் ஒருவர் "ஸார், நான் ஒரு ரூபாய் கொடுக்கிறதாய் வைத்துக்கொண்டு ஜோஸ்யம் பாருங்கள். அது பலிக்கா விட்டால் என்ன தருகிறீர்" என்றார்.

ஜோஸ்யர்:—50 ரூபாய் தருகிறேன். பலித்தால் நீங்கள் என்ன தருகிறீர்கள்?

நண்பர்:— ஒரு ரூபாயைக் கொடுத்து விடுகிறேன்! —நா. சதாசிவன்.

★

சமயோசித வாதி!


"நான் பத்திரிகைக்குப் பதிலாக ரேடியோ வாங்கலாமென்று பார்க்கிறேன்."

"ரேடியோ வாங்கினால் டிபன் எடுத்துக் கொண்டு போக ரேடியோ உபயோகப்படாது!" —எல். நரஸிம்மன்.

★

குளித்தால்?

தாயார்:—அம்பி: போய் முகத்தை அலம்பிண்டு வந்தாயானால் உனக்கு ஒரு வாழைப்பழம் தருவேன். கை கால்களையும் அலம்



பிண்டு வந்தாயானால் மூன்று வாழைப்பழமாய்க் கொடுப்பேன்.

பையன்:—அம்மா, போய் குளிச்சுட்டே வந்தால் எத்தனை பழம் தருவாய்?

—ஜாஜு.



குளிர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!



நான் களைப்படையாமல் இருக்கிறேன்!

விநோலியா அதிக சுகத்தைக் கொடுக்கக் கூடிய சோப். அதை உபயோகிப்பதனால் ஒவ்வொரு ஸ்நானமும் குளிர்ச்சியையும், உத்ஸாகத்தையும் உண்டு பண்ணுகிறது. இந்த சோப்பின் வாசனை களைப்படைந்த நரம்புகளுக்கு சோர்வை போக்கி சுகத்தைக் கொடுக்கிறது.



உத்ஸாகத்தைக் கொடுக்கிறது!



விநோலியா ஒயிட் ரோஸ் ஸோப்பு

VWR. 16-50 TM

VINOLIA CO. LIMITED, LONDON, ENGLAND




இரு இலையும் ஒரு மொட்டும்..

'இரு இலையும் ஒரு மொட்டு'மாகப் பறிப்பதுதான் உயர்ந்த ரகமான தேயிலையைப் பறிக்கும் சரியான முறை. இப்படிச் செய்வதனால், இளம் கொழுந்தான தளிர்கள்தான் பறிக்கப்படுகின்றன என்ற நிச்சயம் ஏற்படுகிறது.

ப்ரூக் பாண்ட் கையாளும் முறைப்படி விற்பனைச் சிப்பந்திகளால் வியாபாரிகளுக்குப் புத்தம் புதிதான சரக்குகள் அடிக்கடி விநியோகிக்கப்படுகின்றன. 'இரு இலை ஒரு மொட்டு' அதன் உன்னதமான மணத்தோடே உங்களிடம் வந்து சேர்வதற்கு இந்த முறைதான் காரணம்.

இந்தியாவின் முக்கியமான இடங்களிலெல்லாம் உள்ள டெப்போக்களிலிருந்து எங்கள் விற்பனைச் சிப்பந்திகளால் தேயிலை சதா எடுத்துக்கொண்டு போகப்படுகின்றன. டெப்போவில் காலி ஆக ஆக அந்த இடத்தைத் தொழிற் ஆலைகளிலிருந்து கொண்டு வரப்பட்ட தேயிலை நிரப்புகிறது.

பூரணமான மணத்தோடு கூடின புத்தம் புதிதான குணம், திருப்தி யளிக்குந்தன்மை, இவற்றை ரசிக்க விரும்புபவர்களுக்கு "டார்ஜீலிங் ப்ளெண்ட்"தான் சரியான தேயிலை.



ப்ரூக் பாண்ட்



இதை அளிப்பதிலேயே ஒரு அலாதி அந்தஸ்து


டிலக்ஸ் டெனார் சிகரெட்டை உங்கள் சிநேகிதர்கள் ரஸிப்பார்கள். 100% உத்தர வாதமுள்ள தூய வர்ஜீனியா புகையிலையிலிருந்துதான் டெனார்ஸ் தயாரானவை. டெனார் சிகரெட்டுகள் உங்களது ரஸிகத் தன்மைக்கு ஒரு அத்தாட்சி ஆகும். இவைகளின் தனி மணம் இவைகளுக்கே உரித்தானது. மெல்லிய தொண்டை உடையவர்கள் அனுபவிக்கக் கூடியது டெனார்தான்.

டி லக்ஸ் டெனார் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

Tenor *is truly a de Luxe Cigarette*

JAMES CARLTON LTD, LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA

கல்கி



KALKI அக்டோபர் 15, 1944 **4** அண

நகைச்சுவை அரசு

திரு N. S. கிருஷ்ணன் அவர்களின்

மதுரை ஸ்ரீ மங்கள பாலகான சபையாரால்

சென்னை

ஒற்றைவாடை தியேட்டரில்

14-10-44 வெற்றிகரமான 6-வது வாரம்

"பூம்பாவை" புகழ்

K. R. ராமசாமி

நடிக்கும்



மனோஹரா

(நாடகம்)

★

பாடல்கள்:

உடுமலை நாராயணக்கவி

சீன் ஜோடனைகள் — ஓவிய நிபுணர்
K. மாதவன்

**திங்கள்தோறும்
நாடகம் கிடையாது.**

பிரதி செவ்வாய், வியாழன், சனி இரவு 9-30 மணிக்கும்
பிரதி ஞாயிறு, புதன், வெள்ளி மாலை 6-30 மணிக்கும்

16-10-44 திங்களன்று தீபாவளியை முன்னிட்டு
மாலை 6-30 மணிக்கு ஸ்பெஷலாக எமது கடைசி நாடகம் நடத்தப்படும்.

சனி, ஞாயிறுகளில் காம்பிளிமெண்டரி டிக்கட் செல்லாது

எமது அடுத்த நாடகம்

புதிய ஸீன்களுடன் S. V. சகஸ்ரநாமம் நடிக்கும்

"இழந்த காதல்"

டிக்கட்டு விபரம்: ரூ. 3-0-0, 1-12-0, 1-2-0, 0-9-0, 0-4-6

மானேஜர்: P. K. பிள்ளை

கும்பகோணம்

டி. எஸ். ஆர்.

கம்பெனியின்

உயர்ந்த

- அத்தர்
- அரகஜா
- புனுகு
- ஜவ்வாது
- ஊதுவத்தி
- தசாங்கம்
- தைலங்கள்
- பன்னீர்
- பாக்குத்தூள்

முதலியன

•

விவரங்களுக்கு எழுதவும்

•

மதராஸ் ஸிடி ஏஜெண்டுகள் :

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோர்ஸ்


பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

•

பாலக்காட்டுக்கு ஸோல் ஏஜெண்டுகளும்
கோயமுத்தூருக்கு ஸ்டாக்கிஸ்டுகளும்

தி சதர்ன் இந்தியா ஏஜன்ஸீஸ்

அவநாசி ரோடு — கோயமுத்தூர்



சங்கீதம் மாயாமோஹினி, அதை இசையுடன் வாத்யங்களில் வாசிக்கக் கேட்கும்போது கந்தர்வ லோகத்துக்கே சென்று விடுகிறோம். மெய்மறந்து விடுகிறோம். அதைக் காட்டிலும் சிறந்தது ஒன்று உண்டா? ஆம்! மக்களின் மழலை மொழி. அவர்களது மோஹனப் புன் சிரிப்பில் நமது நெஞ்சைப் பறிகொடுத்து விடுகிறோம். அவர்களது முகம் மலர்ந்தால் நமது அகம் விரிகிறது. அவர்களது குறுகுறுத்த விழிகளின் விஷமப் பார்வையில் கட்டுண்டு செயலிழந்து விடுகிறோம். அவர்களது அந்த புன்னகையையும் விஷமப் பார்வையையும் நாம் சதா கண்டுகளிக்க வேண்டாமா? அவர்களது பரவசத்துச் சிறு மதலைக்குதலைப் பேச்சைக் கேட்டுக் கேட்டு இன்பத்தை அநுபவிக்க வேண்டாமா?

அதற்குரிய சாதனம்

சார்லீஸ் பிஸ்கட்ஸ்

இன்றே உங்கள் குழந்தைகளுக்கு சார்லீஸ் பிஸ்கட்ஸ் வாங்கிக் கொடுங்கள்.

சார்லீஸ்
உயர் தரமான பிஸ்கட்ஸ்
CHARLEY & CO
USILAMPATTI
எல்லா இடங்களிலும் கிடைக்கும்

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.